புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

இதழ் 12
ஜனவரி 2012

## சமகால அரசியல் நிலைமைகளும் தோழர் மணியத்தின் நினைவுகளும்

*சி.கா. செந்திவேல்*

## உலக மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்துதற்கான ஏகாதிபத்தியக் கருவியாகப் பண்பாடு

*இ. தம்பையா*

## கொலனி ஆட்சிக்குப் பின்பான இலங்கையில் நிலவுடைமை உற்பத்தி உறவுகள்

*இமயவரம்பன்*

## ஈழத் தமிழ் இலக்கிய அடையாளமும் இடதுசாரி இயக்கமும்

*சி. சிவசேகரம்*

## கவிதைகள்:

*மாக்ஸ் பிரபாஹுர், க்றிஸ்ற்றொFர் Fான் விக்*

# பதின்மூன்றாம் வாய்ப்பாடு

இலங்கை மீது இந்தியா திணித்த உடன்படிக்கை அடிப்படையிலான பதின்மூன்றாம் அரசியற் சட்டத் திருத்தத்தின் மூலம் தேசிய இனப் பிரச்சனை தீருமென எதிர்பார்க்க என்றுமே நியாயம் இருக்கவில்லை.

பதின்மூன்றாம் திருத்தம் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்கப் போதுமானதல்ல எனினும் அதன் சில பகுதிகள் பிரச்சனையின் சில அம்சங்களைக் கையாள ஓரளவேனும் உதவின. அவற்றை நிராகரிப்பது நல்ல நோக்கமுடையதல்ல. விடுதலைப் புலிகள், அற்ப அரசியல் லாபத்துக்காக, மாகாண சபைகளுக்கு இருந்திருக்கக் கூடிய சுயாதி பத்தியத்துக்குக் குழிபறிக்கச் சனாதிபதி பிரேமதாசவுக்கு உதவினர். அதன் பின், அத் திருத்தச் சட்டத்தை மேலும் பயனற்றதாக்கும் நடவடிக்கைகள் அடுத்தடுத்து வந்த ஆட்சிகளால் மேற் கொள்ளப்பட்டு வந்தன. எந்த அரசியல் அதிகாரமுமற்ற ஒரு அமைப்பாக இருபது ஆண்டுகளைக் கழித்த வடக்கு-கிழக்கு மாகாண சபை இப்போது எந்த அரசியல் அதிகாரமுமற்ற இரண்டு மாகாண சபைகளாகிக் கிடக்கிறது.

எவ்வித அதிகாரப் பகிர்வுக்கும் ஆயத்தமற்ற பேரினவாத அரசியற் கட்சிகளின் நோக்கில், இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை வெறுமனே சிங்கள-தமிழ் இன முரண்பாடு மட்டுமே. தமிழ்த் தேசியக் கோரிக்கைகளைக் குழப்புவதற்கு அப்பால் முஸ்லிம்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு அவை ஒரு பெறுமதியையும் வழங்குவதில்லை. எந்தச் சிங்களப் பாராளுமன்ற அரசியற் கட்சியும் சிங்கள முதலாளி வர்க்கம் உருவாக்கிய பேரினவாதச் சிந்தனையின் பிடியிலிருந்து மீள முடியாதபடி பேரினவாத அரசியல் அவற்றைக் கட்டிப்போட்டுள்ளதால் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்கவும் அவை அஞ்சுகின்றன.

போரின் வெற்றி தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்க உதவுமென்று சொல்லப்பட்டது. ஆனால் அமைதிப் பேச்சுக்கள் குலைந்து 2006இல் போர் முன்னெடுக்கப்பட்ட பின் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் வடக்குக் கிழக்கின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. போர்க்கால இனப் படுகொலைகளையும் பெரும் அழிப்புக்களையும் மூடி மறைத்துக் கொண்டே தமிழ் மக்களின் பிரதேச அடையாளத்தைச் சிதைப்பதில் பேரினவாத அரசும் அதன் ஆயதப் படைகளும் தீவிரமாக உள்ளன. இந்த நிலையில் இதுவரையும் பதின்மூன்றாம் திருத்தம் பற்றியும் 13+ பற்றியும் 13- பற்றியும் பேசப்பட்டுவந்தவையெல்லாம் வெறும் இழுத் தடிப்பு வேலைகளே என நாம் அறிவோம்.

போரை வெல்லுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அதிகளவில் நேரடியாக உதவிய இந்தியா, இன்றுவரை, பதின்மூன்றாம் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வைப் பற்றியே பேசி வந்துள்ளது. ஆனால், எந்த நிலையிலும் —இலங்கைக்கு இந்திய உதவி மிகத் தேவைப்பட்ட போதிலும்— வடக்குக் கிழக்கின் இணைப்பு துண்டிக்கப் பட்டதை அது கண்டிக்கவில்லை. அதைப் பற்றி எவ்வித அழுத்தத்தையும் இந்தியா இலங்கை அரசாங்கத்திடம் பிரயோகிக்கவில்லை.

போரின் பின்பு, இந்திய வற்புறுத்தலின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டணி அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் மட்டுமன்றி என்றுமே சுயநிர்ணயம் பற்றிப் பேச இடமில்லாதபடி அது இந்திய ஆட்சியாளர்களால் கட்டிப் போடப்பட்டுள்ளது. அதன் குறைந்தபட்சக் கோரிக்கைகளான —பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைகட்கு வழங்கப்பட்ட— காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவும் இலங்கை அரசாங்கம் ஆயத்தமாக இல்லை. இதுவே யதார்த்தம்.

இந்திய அரசாங்கப் பிரமுகர் எவரும் இலங்கைக்கு வந்து போகிற போது அவர்கள் தேசிய இனப் பிரச்சனையைப்பற்றிப் பேசவே வந்து போவதாகத் தமிழ் மக்களுக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்தியாவின் அக்கறைகள் வேறு. அவை, நிச்சயமாகத் தமிழரைப் பற்றியனவல்ல. சிலர் நினைப்பது போல, இலங்கையில் சீனாவின் செல்வாக்கைப் பற்றியனவுமல்ல. இந்தியா இலங்கையில் மிகவும் வேண்டுவது தன் பொருளாதார ஆதிக்கமே. அந்த அடிப்படையிலேயே மீனவர் பிரச்சனை உட்பட்ட பலவற்றையும் அது அணுகுகிறது.

அண்மையில் வந்து போன இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, சனாதிபதி ராஜபக்ஸவுடன் 13+ பற்றி உடன்பாடு கண்டார் என்று செய்திகள் கசிந்தன. நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பேசப் படவுள்ளமைக்கும் கிருஷ்ணாவின் வருகைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கலாம். ஆனால், பதின்மூன்றாவது திருத்தததிற்கு மிகவும் பின்னால் நிற்கும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவே தயங்கும் சனாதிபதி ராஜபக்ஸ, 13+ பற்றித் தான் எதையுமே பேசவில்லை எனக் கிருஷ்ணா போனபின் அறிவித்தார். கிருஷ்ணா அதை மறுக்கவில்லை.

எனின், கிருஷ்ணாவின் வருகை இந்திய நலனுக்குச் சாதகமான முறையில் சீபா என்ற இந்திய-இலங்கை வணிக உடன்படிக்கையை நிறைவு செய்யவே எனவும், இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நிற்பதற்கு இந்தியா கேட்கும் விலை அதுவே ஒழிய, 13+ அடிப்படையிலான தீர்வல்ல எனவும் நமக்கு விளங்க வேண்டும்.

*****

# சமகால அரசியல் நிலைமைகளும் தோழர் மணியத்தின் நினைவுகளும்

*தோழர் சி.கா. செந்திவேல்*

***தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 22வது நினைவு நாட் கூட்டம் கொழும்பில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் சி. சிவசேகரம் தலைமையில் 27.11.2011 அன்று நடைபெற்றது. அங்கு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் ஆற்றிய நினைவுப் பேருரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.***

பொதுவுடைமை இயக்கமானது மாக்சியத்தை அடிப்படைக் கருத்திய லாகவும் உலகக் கண்ணோட்டமாகவும் கொண்டே உலகம் முழுவதும் பற்றிப் பரவி வந்திருக்கிறது. தொழிலாளர்களதும் விவசாயி களதும் பிற உழைக்கும் மக்களினதும் தலைமையிலான போராட்டத் தினால் சமூக மாற்றத்தை வென்றெடுத்து நிலைநிறுத்த வேண்டும் என்பதை மாக்சிசமும் பொதுவுடைமை இயக்கமும் வெளிப்படை யாகவே பிரகடனம் செய்து வந்துள்ளன. அந்த வகையில் பழமைவாதமும் மரபுபேணலும் சடங்கு சம்பிரதாயங்களும் இறுக்கமுடன் இருந்துவரும் நமது தமிழ்ச் சூழலில் ஒருவர் மாக்சிச உலகக் கண்ணோட்டத்தை உள்வாங்கிப் பொதுவுடைமைவாதியாகிக்கொள்வது இலகுவானதாக இருப்பதில்லை. அத்தகைய சூழலில் துணிவான மீறல்களும் கடுமை யான எதிர்நீச்சல்களும் கொண்டே பொதுவுடைமை இயக்க முன்னோடி கள் தமது அரசியல் சமூக பண்பாட்டுப் பணிகளை அர்ப்பணிப்புக் களினதும் தியாகங்களினதும் ஊடாக முன்னெடுத்து வந்துள்ளனர். அதனாலேயே அவர்கள் சமூகத்தில் தனித்துவமுடையோராக நோக்கப் பட்டனர். அத்தகைய முன்னோடிகளில் இரண்டாம் தலைமுறையைச்

சேர்ந்தவரே தோழர் கே.ஏ. சுப்பிரமணியம். தான் வரித்துக்கொண்ட கொள்கையிலும் நடைமுறையிலும் சொந்த வாழ்விலும் பொதுவுடை மையாளர்கட்குரிய அடிப்படை நிலைநின்று வந்தவர். அதன் காரண மாகவே அவர் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவராக நினைவு கூரப்படுகின்றார்.

தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தமிழர்களின் சமூகப் பரப்பிலே தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட சமூக நீதிக்காகவும் உரிமைகட்காகவும் சமத்துவத்திற் காகவும் போராட்ட இயக்கங்களை முன்னெடுத்தவர்களின் வரிசையில் முன்னின்றவர். பொதுவுடைமைக் கட்சியின் தலைமைத்துவத்தில் தன்னை ஒருவராக்கிக் கொண்டவர். அதன் காரணமாக வடபுலத்தில் தொழிற்சங்க இயக்கத்தையும் சாதியத்திற்கு எதிரான 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியின் ஊடான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தையும் முன்னெடுப்பதில் முன்னின்றார். 1966-77 கால கட்டத்திலான வெகுஜன எழுச்சிகளும் போராட்டங்களும், தமிழர்களு டைய வரலாற்றில் அன்றுவரை புறக்கணிக்கப்பட்டு வந்த தாழ்த்தப் பட்ட மக்களுக்கு மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் சமத் துவத்தையும் வென்றெடுக்க வழியேற்படுத்திக் கொடுத்தன. அது மட்டு மன்றிப் பிற்காலத்தில் எழுந்த தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டம் என்ற தளத்தில் அனைத்துத் தமிழர்களையும் ஒன்றுபட வைத்ததற்கான அடிப்படைகளையும் வெகுஜனப் போராட்டங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன என்பது சிலர் மறந்துகொள்ளும் ஒன்றாகும். இவ் வெகுஜனப் போராட்டக் காலங்களில் தோழர் கே.ஏ. சுப்பிர மணியத்துடன் இணைந்து நின்று போராட்டப் பணியாற்றிய நினைவுகள் இன்றும் பசுமையானவையாகவே இருந்துவருகின்றன. நெஞ்சில் உரமும், கொண்ட கொள்கையில் நேர்மைத் திடமும், உழைக்கும் மக்கள் மீதான போராட்ட நம்பிக்கையையும் கொண்ட புரட்சிகரப் பொதுவுடைமைவாதியாகவும் தலைமைத்துவ வழிகாட்டியாகவும் வாழ்ந்து மறைந்தவர் தோழர் மணியம். அவருடனான நினைவுகள் பகிரப்படும் போது அவை போராட்டத்தையும் சமூக மாற்றத்தையும் வேண்டி நிற்கும் இளம் தலைமுறையினருக்குப் பயன் உள்ள அனுபவங்களாக அமைய முடியும் என்று நம்புகின்றோம்.

அத்தகையதொரு நேர்மையான பொதுவுடைமை இயக்க முன்னோடி யின் நினைவுகளின் ஊடாகச் சமகால அரசியல் போக்குகளை நோக்குவது அவசியமாகும். ஜனாதிபதியும் அவரது மஹிந்த சிந்தனை வழிகாட்டலிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும்

தமது இரண்டாவது பதவிக்காலத்தின் உச்சநிலையில் இருந்து வருகின்றார்கள். அந்த உச்சநிலை ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்கு நான்கு நிலைகளிற் செயற்பட்டு அவற்றை நிலைநிறுத்தி வைத்துக் கொண்டார்கள். ஒன்று அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம் தனிநபர் சர்வாதிகாரத்தை மேலும் விஸ்தரித்துக் குடும்ப ஆட்சியை வலுப்படுத்திக் கொண்டமை. இரண்டாவது, பல்வேறு கட்சிகளையும் உள்ளீர்த்துப் பாராளுமன்றப் பெரும்பான்மையை மூன்றிலிரண்டுக்கு மேல் தக்கவைத்துக் கொண்டமை. மூன்றாவது, ஆயுதப்படைகளை முறைமைப்படுத்தியும் வலுப்படுத்தியும் தமக்கும் தமது ஆளும் வர்க்கச் சக்திகளுக்கும் உரிய அரணாக மாற்றிக்கொண்டமை. நான்காவது, சிங்கள பௌத்தப் பேரினவாதத்தை வெளிப்படையாகவும் உள்ளார்ந்த அடிப்படையிலும் பற்றிநின்று சிங்கள மக்களைத் திசைதிருப்பி வைத்திருப்பது. மேற் கூறிய நான்கு முக்கிய தூண்களிலேயே இன்றைய மஹிந்த சிந்தனை அரசாங்கம் தன்னை நிலைநிறுத்தி நிற்கின்றது.

இத்தகைய மஹிந்த ராஜபக்ச அரசாங்கமானது நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு எதிராகப் பொருளாதார அரசியல் தளங்களில் தரகு முதலாளித்துவ பேரினவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. ஒன்று நவகொலனித்துவ அமைப்பு முறையை வலுப்படுத்தும் வகையிலான நவதாராளவாத பொருளாதாரத்தை விஸ்தரித்துச் செல்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகின்றமை. இரண்டாவது, யுத்தத்தின் மூலம் வடக்கு கிழக்கையும் தமிழ் மக்களையும் அழித்து அவலங்களுக்குள் தள்ளியது மட்டுமன்றி யுத்தத்திற்குப் பின்பும் தொடர்ந்து பேரினவாத ஒடுக்குமுறையினை ராணுவ மயப்படுத்தலின் ஊடாக முன்னெடுத்து வருவதுமாகும்.

மஹிந்த சிந்தனையின் தூரநோக்கு என்பதன் ஊடாக இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றப் போவதாக அரச சார்பு ஊடகங்களில் நீட்டி வாசிக்கப்படுகின்றது. ஆனால் இன்றைய மஹிந்த சிந்தனை அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்கை வெளிப்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ள அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் தகுந்த உரைகல்லாகும். அதனை ஆழ்ந்து நோக்கும் எவரும் அதன் உள்ளார்ந்த மக்கள் விரோதப் போக்கை இலகுவாகவே அடையாளம் கண்டுகொள்ள முடியும். வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கு ஒதுக்கியுள்ள இருபத்து மூவாயிரம் கோடி ரூபாவானது மிகக்கூடிய தொகை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பேரினவாத யுத்தத்தை

முன்னெடுப்பதற்காக கட்டியெழுப்பப்பட்ட சுமார் நாலரை இலட்சம் ஆயுதப்படைகளைப் பராமரிக்கவும் தீனிபோட்டு வளர்த்துக் கொள்ள வுமே மேற்படி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆறு மாதங் களில் இத் தொகை குறைநிரப்புப் பிரேரணை மூலம் மேலும் அதி கரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு பாதுகாப்பு என்ற பெயரில் பேணப்படும் ஆயுதப்படைகள் அடிப்படையில் உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எதிராகவே பயன்படுத்தப்படும். இன்று வடக்கு கிழக்கு இராணுவமயப்படுத்தலின் கீழ் முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு நிரந்தரமாக்கப்படுவதுடன் மக்களின் இயல்பு வாழ்வை மறுத்து ராணுவ நிர்வாகம் மேன்மேலும் இறுக்கப்பட்டு வருகின்றது.

இதே நிலை, வடக்கு கிழக்கிற்கு மட்டுமன்றி தெற்கிற்கும் விஸ்த ரிக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் தெற்கில் தொழிலாளர்கள், ஊழியர் கள், வேலையற்றோர், மாணவர்கள் ஆகியோர் வீதிக்கு இறங்க ஆரம்பித்துவிட்டனர். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் நாட்டின் உழைக்கும் மக்களான தொழிலாளர்கள், விவசாயி கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் என ஏகப் பெரும் பான்மையான மக்களைக் கவனத்திற் கொள்ளவேயில்லை. அவர்க ளுக்கு எவ்வித ஆறுதலையும் ஆதரவையும் வழங்கவில்லை. அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பதுகூட ஏமாற்றே யாகும். வெறும் வாழ்க்கைப் படியாகவே அன்றி அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அதேவேளை ஏற்கனவே வானத்தை நோக்கி உயர்ந்து செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவோ அதன் மூலம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவோ வழிவகைகளை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கவில்லை. அதற்குப் பதிலாக மேலும் விலைகள் அதிகரித்துச்செல்லும் வகையில் மூன்று சதவீத நாணய மதிப்பிறக்கம் செய்யப்படவுள்ளது. நாட்டின் பொருளா தாரம் முற்று முழுதாகவே மறுகொலனியாக்கத்தின் ஊடாக நவ கொலனித்துவமாக இறுக்கப்பட்டு வருகிறது. அன்று 1977ல் ஜே.ஆர். தொடக்கி வைத்த தாராளமயம், தனியார்மயம் மற்றும் திறந்த சந்தை என்ற நவதாராளப் பொருளாதாரத்திற்குள்ளும் அதற்கு வழிகாட்டி பாதுகாப்பு வழங்கிவரும் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கும் மஹிந்த சிந்தனை மூலம் வலுச் சேர்க்கப்பட்டு வருகின்றது. நாட்டு வளங்கள் யாவும் அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கும் உள் நாட்டுப் பெரு முதலாளிகளுக்கும் தாரைவார்க்கப்பட்டு வருகிறது. இவற்றால் அற்ப சொற்பமாகவே இருந்துவந்த தேசிய பொருளாதாரம் என்பது அடிச்

சுவடே இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டது. அதனாலேயே சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் இன்றைய அரசாங்கத்திற்குத் தொடர்ந்து கடனும் ஆலோசனைகளும் வழங்கி நிற்கின்றன. இவற்றைக் குறைந்தபட்சமாவது எதிர்ப்பதற்கு முன்னிற்க வேண்டிய பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டவர்கள் அரசாங்க அமைச்சர் பதவிகளும் சலுகைகளும் பெற்று எதுவும் தெரியாதவர்களைப் போன்று இருந்து வருகின்ற பரிதாப நிலையைக் காணமுடிகின்றது. ஜே.வி.யினர் மட்டுமே வீதியில் இறங்கி எதிர்ப்புத் தெரிவித்து வரு கின்றனர். அதுகூட வாக்கு வங்கியைப் பலப்படுத்தும் நோக்கிலேயே அன்றி அனைத்து உழைக்கும் மக்களினதும் ஒன்றுபட்ட எழுச்சியை நோக்கி அல்ல என்பது பகிரங்கமானதாகும். அவர்கள் பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து விடுபட முடியாதவர்களாகவே இன்றும் இருந்து வருகிறார்கள். அதேவேளை ஜே.வி.பி.க்குள் அதிருப்தியாளர்களாகி வெளியேறியுள்ள மாற்றுக் குழுவினரது நடவடிக்கைகளையும் நிலைப் பாடுகளையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

இவ் வேளை, மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினையில் முன்னெடுத்த கொள்கை நிலைப்பாடா னது மிக மோசமானதாகும். யுத்தத்தின் மூலம் தீர்வு காண்பதில் முழுப்பலத்தையும் வல்லரசு மேலாதிக்க நாடுகளின் உதவி ஒத்தாசை களுடன் பிரயோகித்துக் கொண்டது. அதனால் தமிழ் மக்கள் வரலாறு காணாத அழிவுகளையும் அவலங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. இன்றும் அவற்றிலிருந்து மீளமுடியாத மக்களாகவே வடக்கு-கிழக்கு மக்கள் இருந்து வருகின்றனர். இவ்வாறான அழிவுகட்கும் இழப்புக் கட்கும் இடப்பெயர்வுகட்கும் தொடர்ந்து வந்த பேரினவாத தரகு முதலாளித்துவ ஆளும் வர்க்க ஆட்சிகளும் அவர்களுக்கு அரவ ணைப்பு வழங்கிய இந்தியாவும் அமெரிக்கவும் பிற மேற்குலக நாடுகளும் மட்டுமன்றிச் சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளும் பங்காளிகளாவர். அதேவேளை, தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கி வந்த அனைத்துத் தலைமைகளும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யதார்த்தமற்றதும் மக்கள் சார்பற்ற அரசியல் இராணுவ அராஜகப் போக்குகளும் காரணம் என்பதை இலகுவில் தட்டிக்கழித்துவிட முடியாது. யுத்தம் முடிவுற்றுத் தாம் வெற்றி பெற்ற தாகக் கூறிக்கொண்டபோதும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணுவதை மறுத்து இராணுவ ஒடுக்குமுறையின் கீழேயே வடக்கு கிழக்கையும் தமிழ் மக்களையும் வைத்திருப்பதில் மஹிந்த சிந்தனையானது முனைப்புடன் இருந்து வருகின்றது. அதனை

மக்கள் சார்பாகவும் மக்களோடு இணைந்து நின்றும் எதிர்ப்பது நேர்மையான ஒவ்வொரு பொதுவுடைமைவாதியினதும் தம்மை இடது சாரிகள் என்போரினதும் கடமையாகும். அதேவேளை தமிழ்த் தேசிய வாதம் என்ற குறுகிய தேசியவாத நிலைப் பாட்டால் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு வழிகாட்ட முடியாது என்ற உண்மையும் யதார்த்தமும் மக்களுக்கு உணர்த்தப்படவேண்டும். இதுவரை எந்த வொரு தமிழ்த் தலைமையும் தமது கடந்தகாலம் பற்றி எவ்வித விமர் சனம்-சுயவிமர்சனத்தையும் முன்வைக்கத் தயாராக இல்லை. தங்களது கொள்கைகளாலும் வழிகாட்டல்களாலும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகட்கும் இழப்புக்கட்கும் தகுந்த மன்னிப்பைக் கேட்கக் கூடத் தயாரில்லாத நிலையிலேயே தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைவர் களாகத் தமிழ்க் கட்சிகள் தலைமைத்தாங்க முன்னிற்கின்றன. இது அன்றிலிருந்து இன்றுவரையான பழைமைவாத ஆதிக்க அரசியலைக் குறுந்தேசியவாதமாக முன்னெடுப்பதன் தொடர்ச்சியாகவே காணப் படுகின்றது.

எனவே வர்க்கப் போராட்ட அரசியல் மார்க்கத்தில் உழைக்கும் மக்களின் தலைமையிலான பரந்துப்பட்ட வெகுஜன எழுச்சியும் போராட்டங்களுமே இன்றைய சூழலில் முன்னெடுக்கப்பட வேண்டியன வாகவுள்ளன. இப் பாதையிலேயே சுயநிர்ணய உரிமையை வென்றெ டுக்க முடிவதுடன் அதற்கான போராட்டமானது சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் ஆகிய அனைத்து உழைக்கும் மக்கள் முன்னெடுக்கும் வெகுஜனப் போராட்டங்களுடன் இணைந்தும் ஒன்றையொன்று ஆதரித்தும் முன்னெடுக்கப்படல் வேண்டும். தெற்கில் முன்னெடுக்கப்படும் ஜனநாயகத்திற்கான உழைக்கும் மக்களின் போராட்டங்களுடன் வடக்குக்-கிழக்கின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் இணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படல் வேண்டும். அதே போன்று வடக்குக்-கிழக்கில் முன்னெடுக்கப்படும் சுயநிர்ணய உரிமைக் கான போராட்டங்களுடன் தெற்கிலே ஜனநாயகத்திற்கும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்குமாக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் இணைக்கப்பட வேண்டும். இவற்றுக்கான மாற்றுக் கொள்கையும் மாற்றுத் தலைமையும் மாற்றுப் போராட்ட மார்க்கமும் முன்நிலைக்கு வரவேண்டும்.

*****

# உலக மக்களை மேலாதிக்கத்துக்கு உட்படுத்தும் ஏகாதிபத்தியக் கருவியாகப் பண்பாடு

*தோழர் இ. தம்பையா*

*(சர்வதேச ஏகாதிபத்திய விரோத கூட்டிணைப்புக் குழுவும் பங்ளாதேஷ் சோஷலிஸக் கட்சியும் இணைந்து 2011 நவெம்பர் 27-29இல் டாக்காவில் ஓழுங்குசெய்த மூன்றாவது சர்வதேச ஏகாதிபத்திய விரோத மாநாட்டில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் சர்வதேச அமைப்பாளர் தோழர் இ. தம்பையா வழங்கிய கட்டுரையின் தமிழாக்கம், "புதிய பூமி"யிலிருந்து நன்றியுடன் இங்கு மீளப்பிரசுரிக்கப்படுகிறது.)*

**ஏகாதிபத்திய உலகமயமாக்கல்**

ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல் அல்லது ஏகாதிபத்திய உலகமய மாக்கல் எனப்படுவது ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியின் விளைவான அதன் புதிய படிநிலையே என்பதும் அது எந்த வகையிலும் கார்ல் மாக்ஸின் விஞ்ஞானரீதியான கண்டடைவகளையோ ஏகாதிபத்தியத்திற் கான லெனினின் வரைவிலக்கணத்தையோ செல்லாமலாக்கவில்லை என்பதும் இப்போது தெளிவாகியுள்ளது. அம் மாபெரும் ஆசான்கள் கண்டடைந்தவற்றை அது உறுதிப்படுத்தியுள்ளது என வேண்டுமானாற் சொல்லலாம்.

ஏகாதிபத்தியம் மாக்சியர்கட்கு மட்டுமே பிரதான எதிரியல்ல. அனைத்து வகையான மேலாதிக்கங்களினின்றும் பாரபட்சங்களினின்றும் சுரண்டலினின்றும் விடுபட்டு வாழவிரும்புவதுடன் இயற்கையின் நல்லன அனைத்தையும் வரவுள்ள தலைமுறைகட்காகப் பேணிக் காக்க விரும்பும் எந்த மனிதப் பிறவிக்கும் ஏகாதிபத்தியம் பிரதான எதிரியே.

மாக்ஸியர்களின் விஞ்ஞானரீதியான கண்டடைவுகளையும் ஏகாதிபத்தியத்திற்கான வியாக்கியானங்களையும் நம்பகமற்றவையாக்கும் நோக்கங்கொண்ட விஷமத்தனமான முயற்சிகளையிட்டு வீணாக்குவதற்கு நமக்கு நேரமில்லை. எனினும் இவ்வாறான விஷமங்களை அம்பலப்படுத்த வேண்டிய வேளைகள் உள்ளன. நம்மை எதிர்நோக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணி தத்துவார்த்த மட்டத்திலும் நடைமுறை மட்டத்திலும் அதி முக்கியமானது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இயன்றளவு விசாலமான ஒரு வெகுசனத் தளம் தேவை. அது உலக மக்களின் ஒற்றுமையையும் இயன்றளவு விசாலமான பங்குபற்றலையும் இயலுமாக்க வல்ல புரட்சிகர உள்ளுணர்வுடன் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

**ஏகாதிபத்தியமும் தேசிய முதலாளியமும்**

ஏகாதிபத்தியத்திற்கெதிராக ஒன்றுபடுத்தக் கூடிய சக்திகளைப் பற்றிய புறநிலை யதார்த்தங்களையும் பரந்துபட்ட கூட்டமைப்புக்களை கணிப்பிலெடுத்தாக வேண்டும். உதாரணமாக, மரபான கொலனியத்தின் கீழே தேசிய முதலாளியம் கொலனிய ஆட்சியிலிருந்து தேசங்களை விடுவிப்பதிற் பெரும் பங்களித்தது. எனினும் கொலனியத்துக்குப் பிந்திய யுகத்தில், நவகொலனியத்தினதும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலினதும் தோற்றத்தையொட்டித் தேசிய முதலாளி வர்க்கம் தனது ஏகாதிபத்திய விரோத ஆற்றலை இழந்து ஏகாதிபத்தியத்துக்குப் பணிந்து போய்விட்டது.

விரைவாகவே நவகொலனிய யுகமாக மாறிவிட்ட கொலனியத்துக்குப் பிந்திய யுகத்தில், கொலனிய எசமானர்களிடமிருந்து ஆட்சியைப் பொறுப்பேற்ற தேசியவாத மேட்டுக்குடிகள், உள்ளூர், சர்வதேசப் பொருளாதாரச் சவால்கட்கு முகங்கொடுக்கையில், மக்களை மேலும் மேலும் ஒடுக்குவோராயினர். ஒடுக்குமுறையாளர்களான தேசியவாத மேட்டுக்குடிகள், காலப்போக்கில், தமது மக்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள, ஏகாதிபத்தியவாதிகளிடம் பாதுகாப்பை வேண்டி, ஏகாதிபத்தியச் நிகழ்ச்சிநிரலுக்குப் பொருந்துமாறு தேசங்களின் இறைமையைச் சரணடைவிக்க ஆயத்தமாகினர்.

தேசியவாத ஆட்சியாளர்களின் உலகளாவிய சரணடைவின் நடுவே, தேசியவாத மேட்டுக்குடிகளில் ஒரு பகுதியினர், ஏகாதிபத்தியவிரோதத் தன்மை இல்லாதோராயிருந்தும், தொடர்ந்தும் ஏகாதிபத்திய விரோதத் தோற்றங் காட்டி வந்தனர். ஏகாதிபத்தியம், இத்தகைய தேசியவாத ஆட்சியாளர்களது மக்கள் விரோத, சனநாயக விரோத, மனித

உரிமை விரோதச் சான்றுப்பதிவுகளைத் தனக்குச் சாதகமாக்கி, அவர்களைக் களைபிடுங்குகிறது. தனிப்பட்ட ஒடுக்குமுறையாளர்களது முறியடிப்புடனோ அழித்தொழிப்புடனோ இக் களைபிடுங்கற் செயற்பாடு நிற்பதில்லை. அது தேசம் முழுவதையும் அதன் மக்களையும் ஏகாதி பத்தியத்தின் காலடிகளிள் கீழே கொண்டுவருமாறு தொடருகிறது.

இவ்வாறு, மரபான கொலனியத்தினதும் நவகொலனியம் வடிவம் பெற்ற கொலனியத்துக்குப் பிந்திய காலத்தினதும் போதிருந்ததைப் போலன்றி, ஏகாதிபத்திய உலகமயமாதலாகவும் நவகொலனியமாவும் வடிவெடுத்துள்ள ஏகாதிபத்தித்துக்கு முகங்கொடுக்கையில், தேசங் களும் உலக மக்களும் சிக்கலான ஒரு நிலைமையை எதிர்நோக்கு கின்றனர்.

**ஏகாதிபத்தியக் கருவியாகப் பண்பாடு**

இத் தொடர்பில், பொருளாதாரத்தினதும் அரசியலினதும் அரசியற் பொருளாதாரத்தினதும் அரசியற் புவியியலினதும் தொலை ஆழம் வரை ஊடுருவுவதற்கும் அப்பால் தனக்கு எட்டக்கூடிய ஒவ்வொரு நாட்டினதும் பண்பாட்டையும் ஏகாதிபத்தியம் ஊடுருவியுள்ளது.

பண்பாடென்பது ஆதிக்க வர்க்கங்கள் கட்டியெழுப்பிய மேற்கட்டு மானம் எனவும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ஆதிக்க வர்க்கங்களின் பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படுவதை உறுதிப்படுத்துமாறு அது முழுச் சமூக வாழ்வின் மீதும் மேலாதிக்கஞ் செய்கிறது எனவும் கார்ல் மாக்ஸ் விளக்கினார்.

முதலாளியத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் பண்பாட்டு ஆதிக்கத் தைப் பற்றி மாக்ஸிய ஆசான்கள் பலரும் விரிவாகப் பேசியுள்ளனர். உலகமயமாதல் மூலம் நாடுகளையும் வெகுசன அமைப்புக்களையும் விடுதலைப் போராட்டங்களையும் ஊடுருவுவதுடன் ஊடுருவிப் பரவும் பண்பாட்டுத் தொழில் துறைகள் மூலமும் ஏகாதிபத்தியம் மக்களின் மனங்கள் மீது மேலாதிக்கஞ் செய்கிறது என அண்மைய ஆய்வுகள் விவரமான ஆதாரங்களை வழங்கியுள்ளன.

அழகியல் விழுமியங்கள் உட்பட மனிதரின் சாதாரணத் தேவை களை நிறைவாக்குமாறு, பரிமாறற் பெறுமதியின் இடையீடின்றிப் பகிரப்படும் விழுமியங்களைப் பண்பாடு கட்டாயத்துக்குட்படாது உண்டாக்குகிறது என்பது பரவலாக ஏற்கப்பட்ட விடயமாகும். அழகிய லும் ஆய்வறிவுஞ் சார்ந்த விளைபொருள் என்ற வகையில், கருத்தும்

விழுமியங்களும் உற்பத்தியாகிப் பரப்பப்படும் தொடர்பாடல் சமூக நடைமுறைச் சாதனமாகவும் பண்பாடு கருதப்படுகிறது.

**ஏகாதிபத்திய உலகமயமாக்கலில் பண்பாட்டின் இடம்**

கொலனிய விரோத வடிவிலோ இனத்துவத் தேசியமாகவும் பேருலகப் பண்பாடாகவுமோ தேசியப் பண்பாடு தன்னைப் புலப்படுத்தலாம். திணிக்கப்பட்ட பண்பாடொன்றின் மூலமும் ஏகாதிபத்திய உலகமய மாக்கலுக்குச் சாதகமான முறையில் பண்பாட்டுப் பிரச்சனைகளை முன்வைப்பதன் மூலமும், தனது மேலாதிக்கத்தை நிறுவுமுகமாக, ஏகாதிபத்தியம் இப்போது பண்பாட்டை நுகர்பண்டமாக்கியுள்ளது. அத்துடன் சந்தைத் தேவைகளின் அடிப்படையில் குறைந்தபட்சப் பண்பாட்டு விழுமியங்கட்குப் பிரதியீடுகளை இடாத பட்சத்தில், அவற்றுடன் மேலதிகமானவற்றைச் சேர்த்துள்ளது.

இந் நிலைமைகளின் கீழ், உலகமயமாக்கற் பண்பாட்டின் அடிப் படை அம்சங்களை நாம் உற்றுநோக்க வேண்டியுள்ளது.

1. **நுகர்பண்டமாகப் பண்பாடு**

   பண்பாட்டு உற்பத்திகள் விற்பனைக்குரிய பண்டங்களாகச் சந்தைக் குக் கொண்டுவரப்படுகின்றன. அதன் மூலம் அவற்றின் உள்ளார்ந்த சமூக விழுமியங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

   பண்பாட்டு உற்பத்திகளை விற்பனைக்குரிய பண்டங்களாக்குவதில் தேசிய, தேசங்கடந்த ஒத்துழைப்பு உள்ள போதிலும், பண்பாட்டு உற்பத்திகளையும் ஆக்கங்களையும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஆய்வறிவுச் சொத்தாகப் பதிவு செய்யும்படி ஏகாதி பத்திய உலகமயமாக்கலின் பிரதான கருவிகளில் ஒன்றான உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மூலம் அழுத்தம் செலுத்தப்படுகிறது. அதன் பயனாகக், கிராமிய மக்களின் பண்பாடும் ஏகாதிபத்திய ஏகபோகத் தின் கீழ் வருகிறது.

2. **வாழ்க்கைமுறையாக நுகர்வுப் பழக்கம்**

   அன்றாட வாழ்வு நுகர்வுப் பழக்கத்தை மையமாகக் கொண்டு இயங்குகிறது. மொத்த வருமானத்தையும் நுகர்வுப் பண்டங்கட்காகச் செலவிடத் துண்டுவதன் மூலமும் நுகர்வின் தேவைகளை நிறை வாக்க வருமானத்தை அதிகரிக்கும்படி வற்புறுத்தியும், சந்தை, நுகர் வைத் தீர்மானிக்கிறது. மக்களை நுகர்வுப் பழக்கத்துக்குள் தள்ளி விடுமுகமாகத், தொலைக்காட்சி, இணையத் தொடர்பாடல் வலைப்

பின்னல் ஆகிய வடிவங்களிலான மின் ஊடகங்கள், அனைத்து இல்லங்களையும் ஊடுருவியுள்ளன. சந்தைச் சக்திகள் வீட்டுத் தேவைகளைப் பதப்படுத்துதுடன் நில்லாது, வாழும் வாழ்க்கையின் விழுமியங்களையும் நுகர்வின் கோலங்களையும் காதலும் பாலுற வும் போன்ற மனித வேட்கைகளையும் மாற்றியமைக்கின்றன.

**3. வாழ்க்கைமுறையாகத் தனிமனிதவாதம்**

பண்பாட்டின் மீது பெருமளவிலான தாக்கத்தை ஏற்படுத்துமுகமாக, மனித வாழ்வின் நுண்ணளவிலான மனித விழுமியங்களை ஏகாதி பத்தியம் சிதைக்கிறது. உலகமயமாக்கலின் கீழ், வசதி படைத்த வர்க்கத்தினரின் வாழ்க்கை முறையையும் சிந்தனைப் போக்குக் களையும் முறையானவையாகத் தோன்றச்செய்து, அதன் மூலம் கூட்டுணர்வையும் பகிரப்படும் பொதுநலன்களையும் பலவீனப் படுத்தித் தனிமனிதவாதம் ஊக்குவிக்கப்படுகிறது.

இடதுசாரி ஆய்வறிவாளர்கள் பலர் தனிமனிதவாதச் சமூக நடை முறைகட்குப் பலியாகி, முதலாளிய ஆய்வறிவாளர்களாகியுள்ளனர். தன்னார்வச் சமூகப் பணிகளாக இருந்தவையெல்லாம், குறிப்பாக ஆய்வறிவாளர்களிடையே, தனிப்பட்ட லாபத்தையும் தனிமனிதவாதத் தையும் ஊக்குவிக்கும் என்.ஜி.ஓ. வேலைத்திட்டங்களாகியுள்ளன

தனிமனிதவாதம் மக்களையும் தேசங்களையும் உழைப்பாளிகளை யும் ஒற்றுமையீனப்படுத்துகிறது. கூட்டு நலனுக்கு மாறாக நிலை நிறுத்தப்படும் போது, அது சமுகத்தை ஒட்டிணைவற்ற தனிமனிதர் களின் திரளாக்கி அதன் மூலம் சமுக அநீதிக்கு எதிரான தடைக ளுக்குக் குழிபறிக்கிறது.

**4. ஏகாதிபத்தியத்தின் கீழான நிறுவனமாகத் தேச அரசு**

கொலனி ஆட்சியினின்று விடுபட்டதையடுத்து, உலகமயமாக்கல் வேகம்பெறும் வரை, தேச அரசுகள் முற்போக்காகவும் சுயாதீனமாக வும் இருந்தன. இன்று பெரும்பாலான தேச அரசுகள் தாம் பிழைத் திருப்பதற்கு ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கின்றன.

ஏகாதிபத்திய உலகமயமாக்கலை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் எனும் வகிபாகத்தை ஏகாதிபத்தியம் தேச அரசுக்கு விதித்துள்ளது. அதன்மூலம் இறைமை, ஒருமைப்பாடு, சுதந்திரம் என்பன பற்றிய தேசியவாத உரிமை கோரல்கள் பொருளற்றுப் போயுள்ளன. அதே

வேளை, ஏகாதிபத்தியத்தை ஏற்கக்கூடிய ‘புதிய’ அரசியல் சிந்தனைகள் தேசியவாத நிகழ்ச்சிநிரலுக்குள் சேர்க்கப்படுகின்றன

**5. ஏகாதிபத்தியத்தின் ஆயுதமாக மனித உரிமைகள்**

ஐ.நா. சபையினூடாகபும் அதன் முகவர் அமைப்புக்களினூடாகவும் உள்நாட்டு, சர்வதேச அரசியல் என்.ஜி.ஓக்களினூடாகவும் மனித உரிமைகளைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டே, நவகொலனிகளி லுள்ள சர்வாதிகாரத் தேச அரசுகளையும் விட அதிகமாக ஏகாதி பத்தியமே மனித உரிமைகளையும் மனித உரிமைச் சட்டங்களை யும் அப்பட்டமாக மீறுகிறது.

மனித உரிமைகட்கான ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல் மனித உரிமைப் பிரச்சனைகளை வெறும் ஆய்வுகளாக முடக்கி மனித உரிமைப் போராட்டங்களை வழக்காடலுக்கும் அழுத்தங்களைச் செலுத்துவதற்கும் மட்டுப்படுத்துகிறது.

எங்கே ஏகாதிபத்தியம் எதிர்ப்பாளர்களைத் தூண்டிவிட்டோ நாடுகள் மீது படையெடுத்தோ ‘ஆட்சி மாற்றத்துக்கான’ அடிப்படையாக மனித உரிமைகளைப் பயன்படுத்துகிறதோ, அங்கே மனித உரிமைப் பிரச்சனைகள், தவிர்க்கவியலாது, முதலாளிய நலன்கள் சார்ந்தவையாகி விடுகின்றன. ஏகாதிபத்திய நலன்கட்குப் பொருத்த மான ‘ஆட்சி மாற்றத்துக்கு’ வாய்ப்பான உள்நாட்டு அரசியற் சூழலை உருவாக்குவதில் என்.ஜி.ஓக்கள் பங்காற்றுகின்றன.

**6. ‘பண்பாட்டு அதிர்ச்சிகளும்’ ‘பண்பாட்டுத் தொடர்பாக்குவோரும்’**

உலகமயமாக்கலின் கீழான ‘பண்பாட்டு அதிர்ச்சிகளும்’ ‘பண்பாட் டுத் தொடர்பாக்குவோரும்’ என்ற கருத்துக்கள், முற்போக்குப் பண் பாட்டுப் பரிமாறலையோ முற்போக்குப் பண்பாட்டுக்குப் பழக்கப் படலையோ பற்றிய கலந்துரையாடல்களின் போது எவரதும் மனதில் இருப்பன போன்றவையல்ல.

தவிர்க்க இயலாத தலைவிதியென ஏகாதிபத்திய உலகமய மாக்கலை மக்கள் ஏற்குமாறு அவர்களுடைய மனங்களில் மேலாதிக்கம் செலுத்துவதற்காகப், பண்பாட்டின் வாழும் விழுமியங் களை இல்லாதொழித்து அவற்றினிடத்தில் பெருவணிக நிறுவனத் துக்குரிய அல்லது சந்தைப் பண்பாட்டுக்குரிய விழுமியங்களைக் கொண்டுவர முனையும் ‘பண்பாட்டு அதிர்ச்சிகளையும்’ ‘பண்பாட்டுத்

தொடர்பாக்கலையுமே’ பண்பாட்டு உலகமயமாக்கலின் வேலைத் திட்டம் கொண்டுள்ளது.

பண்பாட்டு அதிர்ச்சிகள் என்பன ‘காதலர் தினத்தைச்’ சர்வதேச மட்டத்தில் சந்தைப்படுத்துவதையும் சமபாலுறவினரின் உரிமைகளை அழிவான வழிகளில் ஊக்குவிப்பதையும் உள்ளடக்கும். போர், சித்திரவதை, கோரக் கொலை ஆகிய குரூரமான வன்செயல்களை, இயல்பானவையாக இல்லாத இடத்து, நியாயப்படுத்தக்கூடியவை யாக ஏற்க மக்களைத் தயார்ப்படுத்துமாறு, வலுவான பிரசாரத்தின் மூலம் அவை போற்றற்குரியனவாக அல்லது பொழுதுபோக்காக மாற்றப்படுகின்றன.

முதலாளிய ஆய்வறிவாளர்கட்கும் அப்பால், பின்னவீனத்துவப் பிரசாரகர்கள், அறிந்தோ நல்ல ஊதியம் தரும் செய்பணிகளிற் பங்குபற்றுவதன் மூலமோ, ஏகாதிபத்தியத்தின் தொடர்பாக்குவோ ராகப் பணியாற்றுகின்றனர். நடைமுறையிலுள்ள விழுமியங்கள் அனைத்தையும் மறுப்பதன் பயனாக, ஏகாதிபத்திய உலகமய மாக்கலின் பண்பாட்டு நிழ்ச்சிநிரலுக்கு நெருக்கமானோராகப் பின் னவீனத்துவவாதிகள் அமைகிறார்கள். எனவே, பின்னவீனத்துவ வாதிகள் மறைமுகமாகவோ நேரடியாகவோ உலகமயமாக்கற் பண்பாட்டை ஊக்குவிப்போராகின்றனர்.

பண்பாட்டு உலகமயமாக்கல் மானுடத்தின் சுதந்திரத்துக்குப் பகை யானதும் கவனிக்க வேண்டியனவுமான மேலும் பல்வேறு அம்சங் களைக் கொண்டது. இப்போதைய நோக்கல், உலகமயமாக்கற் பண்பாடு கொண்டுள்ள மிரட்டல்கட்கும் அவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவைகட்கும் உரிய கவனத்தைச் ஈர்த்துள்ளது எனக் கொள்ளலாம்.

*****

# கொலனி ஆட்சிக்குப் பின்பான இலங்கையில் நிலவுடைமை உற்பத்தி உறவுகள்

### *இமயவரம்பன்*

கொலனியத்தின் வருகை இலங்கையில் நிலப்பிரபு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு ஒரு வலுவான அடியை வழங்கிய போதும் அடுத் தடுத்து வந்த ஒவ்வொரு கொலனி ஆட்சியும் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசங்களில் ஈடுபட்டு வந்தது. இலங்கையில் நிலவுடைமை முறை இந்தியாவிற் பரவலாக அறியப்பட்ட முறையினின்றும் ஐரோப்பிய நிலவுடைமை முறையினின்றும் பலவகைகளிலும் வேறுபட்டு நின்றதை நியுட்டன் குணசிங்க போன்றோரின் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. நிலம் என்பது அரசனுக்கு உரியதாக இருந்தது என்பதை மனதில் இருத்தியே, கண்டி இராச்சியத்தின் பல கிராமங்களில் நிலம் பகிரப் பட்டுப் பயிர் செய்யப்பட்டமை போன்றவற்றை நாம் விளங்கிக் கொள்கிறோம். எனினும், பெரும் நிலப்பிரபுக்கள் இருந்து வந்தமையை அறிவோம். யாழ்பாணத்திலும் இலங்கையின் கரையோரப் பகுதி களிலும் சில பிரபுத்துவக் குடும்பங்கள் தமது அதிகாரத்தை இழந் தாலும் நிலப்பிரபு—பண்ணையடிமை என்ற அடிப்படையிலான உற்பத்தி உறவும் பெரும் நிலவுடைமையாளர்கள், குத்தகைக்காரர்கள், கூலி விவசாயிகள் என்ற அடிப்படைகளிலான உற்பத்தி உறவுகளும் இருந்து வந்தன. வணிக முதலாளியத்தின் வளர்ச்சியை ஒட்டி விவசாய நிலங்களைத் தமதாக்கிக் கொண்ட நிலவுடைமைக்காரர் களும் உருவாகினர்.

தென்னிலங்கையிற் போலப் பெரும் விவசாய நிலங்களைக் கொண்ட நிலவுடைமையாளர்கள் யாழ் குடாநாட்டில் இல்லாவிடினும், அங்கு சாதி அடிப்படையிலான உற்பத்தி உறவுகள் விவசாயத்தில் ஆதிக்கஞ் செலுத்தின. தென்னிலங்கையின் பெருங் காணிச் சொந்தக்

காரர்கள் எனப்பட்டோரில் தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டச் சொந்தக்காரர்கள் முதன்மை வகித்தனர். சென்ற நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியின் கீழேயே வட மத்திய மாகாணத்தில் பழைய குளங்கள் மீட்டெடுக்கப்பட்டுக் குடியேற்றமும் நெற்செய்கையும் தொடக்கப்பட்டன. கிழக்கு மாகாணம் நெற்செய்கையில் முதன்மையில் நின்றது. மலையகத்திலும் தென்னிலங்கையிலும் விவசாய உற்பத்தி உறவுகளில் பிரபுத்துவப்பாங்கான சாதிய அடிப்படையிலான உழைப்புச் சுரண்டலும் இருந்தது. நிலமின்மை என்பது அங்கு வறுமைக்குக் காரணமான ஒரு பிரச்சனையாயும் பெரும் நிலவுடைமையாளர்களுக்கு மிரட்டலாயும் அமையக்கூடிய ஒரு சூழலில், அப் பிரச்சனைக்கான தீர்வாக நீர்ப்பாசன விருத்தி சார்ந்த குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இம் முயற்சிகள் 1947ல் நேரடிக் கொலனியாட்சி நீங்க முன்னரே தொடக்கப்பட்டு அதன் பின்பும் தொடர்ந்தன. அவை, சமகாலத்தில், வர்க்க நலன்களையும் பேரினவாத நோக்கங்களையும் கொண்டிருந் தமையை மறுக்க இயலாது. எவ்வாறாயினும், பெரும் நிலவுடமையாளர்கள், குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், சிறு காணிச் சொந்தக்காரர்கள் எனும் வர்க்கங்களே தென்னிலங்கையிற் பொதுவாகக் காணப்பட்ட விவசாய வர்க்கங்களாகும்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சி நிறைவேற்றிய நெற்காணிச் சட்டம், பிலிப் குணவர்த்தன மனதிற் கொண்டிருந்த காணிச் சீர்திருத்தம் அல்ல. அது பெருந் தோட்டங்களுக்கு விலக்களித்து நெற்காணி உடமையாளர்கட்குச் சில கட்டுபாடுகளை விதித்தது. கோயில்கட்குச் சொந்தமான காணிகட்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. எனவே பிரபுத்துவ அடிப்படையிலான உற்பத்தி உறவுகள் நாட்டின் சில பகுதிகளிலேனும் தொடர்ந்து பேணப்பட்டன எனலாம். விவசாயத்தில் பெரும் நிலவுடைமையாளர்களின் பங்கு குறைந்து கொண்டு போனமைக்கான உண்மைக் காரணம், குடியேற்றத் திட்டங்கள் மூலம் புதிய விவசாய அபிவிருத்தி நிகழத் தொடங்கியமையாகும்.

நிலமின்மை, விவசாயிகளின் வறுமை, வேலையின்மை போன்றன வற்றைக் கவனத்திலெடுக்குமாறு 1971 ஏப்பிரல் கிளர்ச்சி அரசாங்கத்தை வற்புறுத்தியது. அப் பின்னணியிலேயே தனியார் நிலவுடைமைக்கு 50 ஏக்கர் உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. எனினும் பல நிலவுடைமையாளர்கள் தம்மைக் கம்பனிகளாக அறிவித்துத் தமது

நிலத்தின் பெரும் பகுதியைத் தக்கவைத்துக் கொண்டனர். 1977க்குப் பின்னர் தேசியமயமாக்கப்பட்ட காணிகள் பல பழைய உடைமை யாளர்கட்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட போதிலும், விவசாய உற்பத்தி உறவுகளில் முதலாளியப் பாங்கான பண்புகள் தொடர்ந்து மேலோங்கி வந்ததை மறுக்க இயலாது.

விவசாயத்தில் சிறு நிலவுடைமையார்களின் உற்பத்தியே ஏகப் பெரும்பாலானதாகியது. மகாவலித் திட்டம் அப் பண்பை மேலும் வலுப்படுத்தியது. பெருங்காணிச் சொந்தக்காரர்களால் நிலவுடைமை அடிப்படையில் குத்தகை விவசாயிகளையும் கூலி விவசாயிகளையும் கட்டுப்படுத்த இயலாது போய்விட்டது. சொந்த நிலத்தில் உழைப் பில்லாத போது கூலி உழைப்பு என்கிற முறையை இன்று விவசாயத் துறையில் காணலாம். நிலவுடமை உற்பத்தி உறவின் காணப்பட்ட கட்டாயக் கூலி அடிமை முறை அற்றுப் போயுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதி அடிப்படையிலான பிரபுத்துவ உற்பத்தி உறவுகளும் உழைப்பின் பங்கீடும் இருந்து வந்தன. அதுவும் நவீனமயமாதலுடன் தேய்வடைந்து சாதியத்திற்கு எதிரான போராட்டத்துடன் ஏறத்தாழப் பூரணமான முடிவை எய்திவிட்டன.

எனவே சமூகத்தில் நிலவுடைமை அடிப்படையிலான உற்பத்தியோ உற்பத்தி உறவுகளோ இல்லை என்பது தெளிவு. அதனாலேயே 1970கள் வரை பயன்படுத்தி வந்த ”அரைக் கொலனிய அரை நிலப் பிரபுத்துவ” என்ற அடையாளப்படுத்தலை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இன்று கொலனியம் நவகொலனியமாகத் தன்னை முற்றாக மீள வடிவமைத்துள்ளது. பழைய வகையான கொலனியாட்சி முறையை ஏகாதிபத்தியத்தால் தொடர இயலாது. எனவே உலக மயமாதல் மூலம் நவகொலனியத்தை அது வலுப்படுத்தியுள்ளது. 1978ல் இலங் கையில் அறிமுகமான புதிய திறந்த பொருளாதார கொள்கை நவ கொலனியத்தை வேகப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக முதலில் அந்நியக் கம்பனிகள் பெருந்தோட்டங்களைத் தமதாக்கின. இப்போது நாட்டின் பல்வேறு இடங்களில் அந்நியக் கம்பனிகள் பிற விவசாய ஏற்றுமதிகட்காகப் பயிர்ச்செய்கை நிலங்களைத் தமதாக்கி வருகின்றன. உதாரணமாக, டோல் (Dole) எனும் அமெரிக்கக் கம்பனி நாட்டின் பல்வேறு பகுதிகளில் 62 500 ஹெக்டேயர் நிலங்களைப் பழ உற்பத்திக்காக அரசாங்கத்திடம் இருந்து பெற்றுள்ளது. அங்கு

உழைப்பில் ஈடுபடுத்தப்படவுள்ள விவசாயிகளுக்குச் சம்பளம், நேரம், மேலதிக நேர வேலை போன்றவற்றைக் கடும் சுரண்டல் அடிப்படையில் நிர்ணயித்தும் வருகிறது. அவர்களுக்குச் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன வழங்கப்பட மாட்டாது எனவும் அறிவித்துள்ளது. இது கூலி விவசாயிகளையும் சிறு நிலவுடைமையாளர்களையும் நவீன பண்ணைகளில் கூலி உழைப்பாளர்களாக மாற்ற உதவுகிறது. இன்று கூலி விவசாயிகள் தமது நாளாந்தச் சம்பளத்திற்காகப் பேரம் பேசும் நிலை ஏற்பட்டுள்ளது. சம்பளம், நேரம், உணவு, தேனீர் எனப் பெறுவதுடன் விவசாய வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் நான்கைந்து பேர் சேர்ந்து உழைப்பில் ஈடுபடுகின்றனர்.

எனவே அரை நிலப்பிரபுத்துவம் என்பது உற்பத்தி உறவுகளைப் பொறுத்தவரையில் காலம் கடந்ததாகிச் செல்லாததாகின்றது. அப்படியானால் நாட்டில் பிரபுத்துவமே இல்லை எனக் கூற முடியுமா?

பழைய சமுதாய அமைப்பின் பொருளாதாரக் கட்டுமானம் முற்றாகத் தகர்ந்த பின்பும் அந்த அமைப்பின் அரச அதிகார முறைமை மாற்றியமைக்கப்பட்ட பின்பும் பழைய சமுதாயத்தின் கருத்தியலும் சிந்தனை முறையும் மரபுகள், சடங்குகள், மதம், மொழி என்பவற்றினூடு பண்பாட்டுத் தளத்தில், சமூக உறவுகளிற் பொதுப்படப் பேணப்படுகின்றன. இதை நாம் ஜப்பானியச் சமூகத்தில் மிகவுங் காணலாம். சடங்காசாரமாகவெனினும் மன்னர் ஆட்சியையும் அதையொட்டிய மரபுகளையும் பேணுவது போன்ற சில வகைகளில், முன்னேறிய ஐரோப்பிய நாடுகள் சிலவும் ஜப்பானும் நிலவுடைமையின் மிச்சசொச்சங்களைப் பேணுகின்றன. ஜப்பானியக் கம்பனிகளில் அண்மை வரை – குறிப்பிடத்தக்க அளவில் இன்றும்– சமூக அடிப்படையிலான ஸ்தாபன அமைப்புக்களிலும் ஜப்பானியச் சமூக வழக்கங்களிலும் பிரபுத்துவத்தின் மிச்சங்கள் பொதுப்பட வலுவாகவே இருந்துவந்துள்ளன.

எனவே பிரபுத்துவச் சிந்தனை எளிதில் உதறி எறியக் கூடியதல்ல என்பதனையும் அதை இல்லாமலாக்க முதலாளிய மாற்றத்தை விட வலுவான அடிப்படை மாற்றம் தேவைப்படுகிறது என்பதனையும் உணருகிறோம்.

புலம்பெயர்ந்த ஆசிய சமூகங்களை எடுத்துக் கொண்டாற், பல தேசிய இனத்தவர்கள், ஒரு தலைமுறை கடந்தும் தமது நிலவுடைமைச் சிந்தனைகளில் இருந்து விடுபடாமல் உள்ளனர். மேற்கே புலம்

பெயர்ந்த இலங்கைத் தமிழ்ச் சமூகத்தோரிடையே சாதியம், ஆணாதிக்கம், பழமைவாதம், சடங்கு சம்பிரதாயம் பேணல் என்பன இலங்கையில் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் உள்ளதை விட வலுவாக உள்ளமை அதையே கூறுகிறது. அவர்களது சமுதாய இருப்பை நிலவுடைமைச் சமுதாய இருப்பு என்று கூற இயலாது. இருந்தும், பழமைசார்ந்த நிலவுடைமைக் கருத்தியல் நீடிப்பதைக் காணமுடிகிறது.

விபத்தில் அல்லது சத்திர சிகிச்சை மூலம் கைகால்களை இழந்தவர்களின் மூளையில் அந்த உறுப்பு இல்லாது போனமை முற்றாகப் பதிவாகாமல், இழந்த பகுதிகளில் அரிப்பது போலவும் பிறவாறும் உணர்வுகளை அனுபவிப்பதை 'மாயக் கைகால்கள்' (phantom limbs) என்று சொல்வார்கள். அவ்வாறே முதலாளியத்திற்கு வந்த பின்னும் நிலவுடமைச் சமூக உணர்வுகள் சில சமூகங்களில் நீடிக்கின்றன.

நிலவுடைமையின் எச்சங்கள் சமுதாய மேற்கட்டுமானத்தில் நிலவுவதன் பயனாகச், சமூக மாற்றத்திற்கு எதிரான சக்திகள் வலுவடைகின்றன. ஐக்கியப்படக் கூடியனவும் ஐக்கியப்பட வேண்டியனவுமான வர்க்கச் சக்திகள் பிரிந்து நிற்கவும் அவை காரணமாகின்றன. எனவே நிலவுடைமையின் எச்சங்களைப் பண்பாட்டுத் தளத்திலும் சிந்தனைத் தளத்திலும் எதிர்த்துப் போராடுவது கலை இலக்கியப் பண்பாட்டுத் துறைகளிலும் மட்டுமன்றி சமூக அரசியல் தளத்திலும் தேவையாகிறது.

*****

# ஈழத் தமிழ் இலக்கிய அடையாளமும் இடதுசாரி இயக்கமும்

*சி. சிவசேகரம்*

**ஈழத் தமிழ் இலக்கிய அடையாளத்தின் உருவாக்கம்**

சமகால ஈழத் தமிழிலக்கியத்தின் முக்கியமான திருப்புமுனை அது தன்னை ஈழத்து இலக்கியமெனத் தெளிவாக அடையாளங் காட்டியமை எனலாம். அது வந்தமைவதற்குச் சமூக அடிப்படையிலான காரணங்கள் இருந்தன.

நம்மை அடையாளப்படுத்தும் ஈழத்து இலக்கியங்களுள், அவ்வாறு அடையாளப்படுத்தும் தேவை இல்லாமலே நாட்டார் இலக்கியங்கள் தமக்குரிய மொழிவழக்குடன் தமது சமுகச் சூழலின் முகங்களாகத் தம்மைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தி வந்துள்ளன. செவ்வியல் இலக்கியங்களே இலக்கியங்கள் என்றும் மரபுசார்ந்த செய்யுளன்றி எதுவுமே செய்யுளாகா என்றும் கூறுகிற பழமைவாதம் சமுதாயத்தின் மேனிலையில் இருந்த தமிழறியாதோரிடையிலும் ஆதரவுடன் இருந்தது. எனவே நாட்டார் இலக்கியங்கள் ஒரு பொருட்டாகவே கொள்ளப்படவில்லை.

ஈழம் உருவாக்கிய தமிழறிஞர்களும் ஆய்வாளர்களும் பொதுவாக இந்தியாவைத் தாய் நாடென்றும் இலங்கையைச் சேய் நாடென்றும் நோக்குவோராக இருந்தனர். ஒரு பகுதியினர் தமிழகத்தை வழிபடுவோ ராகவும் இருந்தனர். அவர்களது இவ்வாறான பற்றுக்கும் பாசத்துக்கும் இறுக்கமான சமூகத் தொடர்பு எதுவும் ஆதாரமாயிருக்கவில்லை. ஏனி னும், 'சைவமும் தமிழும்' என்கிற பழமைவாதக் கொள்கையுடன் அது இணங்கிப் போனது.

இந்தியாவுடனும் தமிழகத்துடனும் இருந்து வந்த பொருளாதார, பண்பாட்டுப் பரிமாறல்களையும் மீறி, இலங்கை எனுந் தீவின் பொரு ளாதாரம் இந்தியாவினின்றுங் கணிசமான அளவு சுயாதீனமான தாகவே இருந்து வந்தது. அவ்வாறே பொதுவான மொழி என ஒன்று இருந்த போதும், இலங்கையின் தமிழர் தமிழகத்தின் மொழி வழக்கி னின்று வேறுபட்ட மொழி வழக்குக்களையும் கொண்டிருநதனர்.

ஈழத்தின் தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களிற் பலவற்றின் தோற்றுவாய் தமிழகம் என்பதில் ஐயமில்லை. மரபுவழிப்பட்ட இலக்கி

யங்களையும் செவ்வியற் கலைககளையும் பொறுத்தளவில் ஈழத்துக் கான தனித்துவம் என்பது கலை இலக்கியங்களின் பேசுபொருள் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது. எனினும் இந்தியாவினின்று வேறாகப் பல நூற்றாண்டுக் காலமாக நிருவகிக்கப்பட்ட ஈழத்தின் தமிழ்ச் சமூகம் தனக்கான வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் விருத்தி செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தனித்துவக் கூறுகளைப் புறக்கணித்துச் செம்மொழி, செவ்விலக்கிம் என்பனவும் சைவமும் தமிழும் என்ற மத அடையாள மும் மீளமீள வலியுறுத்தப்படும் போது, தமிழ் நாடும் இந்தியாவும் நமது தனித்துவத்தை மேவி விட இயலுமாகிறது. அது மட்டுமன்றி இந்தத் தீவின் பிற சமூகங்களுடனான உறவின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களதும் உறவுகளதும் பெறுமதி அதன் மூலம் மறுக்கப் படுகிறது.

எனினும், எவ்வாறு தீவிர சிங்கள பௌத்தம் பழமைவாதம் மொழி, மத, பண்பாட்டுத் தொன்மைகளை முன்னிறுத்தி வரலாற்றுத் தொன்மையின் அடிப்படையில் இந்த நாட்டில் தனக்குப் பூரண முன்னு ரிமை கோரியபோதும் கொலனிய, ஏகாதிபத்திய எசமானர்களுடன் சமரசம் காணத் தயங்கவில்லையோ, அவ்வாறே, தமிழ்ப் பழமை வாதமும் கொலனிய, ஏகாதிபத்திய எசமானர்களுடன் சமரசம் காணத் தயங்கவில்லை. வாழும் மொழியையும் பண்பாட்டையும் மேம்படுத்திச் சமூக நீதியை நிலைநாட்ட முன்னின்றவர்கள் அதன் எதிரிகளா னார்கள்.

எனவே, மரபுவாதம் என்பது வெறுமனே தமிழை அதன் பழைய உயர்நிலைக்குக் கொண்டுசெல்லும் ஒரே நோக்கத்தைக் கொண்டதாக இருக்கவில்லை என்பது நமக்கு விளங்கும். அதன் ஆழமான மேட்டுக் குடி அரசியல் நோக்கங்கள் அதன் பின்னால் திரண்ட மொழிப் பற்றாளர்கள் பலருக்கு அன்று விளங்கியிருக்க நியாயமில்லை.

இந்தியாவுடனான உறவு முக்கியமான சில நல்ல விளைவுகளை யும் ஏற்படுத்தியது. இந்திய உறவின் பயனாகவே கொலனியாட்சி யிலிருந்து சுதந்திரம் பற்றிய முதலாவது சிந்தனைகள் யாழ்ப்பாணத் தில் வேர்விட்டன. அந்த உறவின் பயனாகவே, திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுச் சிந்தனை இலங்கையில் வேர்கொண்டது. அதை அடுத்தே இந்திய இடதுசாரிகளுடனான தொடர்புகள் ஏற்பட்டன.

இலங்கையில் தமிழ் மொழி உணர்வினதும் தமிழ்த் தேசியத்தினதும் விருத்தி இந்தியாவில் அவற்றின் விருத்தியினின்றும் மிகவும் வேறு பட்டது. எனினும் இலங்கையில் தமிழ்த் தேசிய உணர்வைக் கிளறி விடுவதற்குத் தமிழகத்தின் தமிழ் மொழி. இன உணர்வாளர்களது சிந்தனைகள் கணிசமான பங்களித்தன.

- இலங்கைத் தமிழ்த் தேசியம் என்பது கொலனிய ஆட்சியின் கீழ் உயர் பதவிகட்கான போட்டியின் விளைவாகச் சிங்கள உயர் வகுப்பினருக்கும் தமிழ் உயர் வகுப்பினருக்கும் இடையிலான முரண்பாடாக உருவானது. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களைத் தீண்டும் வரை, தேசிய இன முரண்பாடு என்பது சட்ட சபை (அரசுச் சபை), அமைச்சுச் சபை என்பவற்றிற் பதவிக்கான போட்டி என்ற எல்லையை மீறவில்லை. மலையகத் தமிழரின் வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்ட பின்பு, சிறு அளவில் ஏற்பட்ட அச்சங்களே, சிங்களம் அரசகரும மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்ற பின்பு, தமிழ் இன உணர்வாகவும் தமிழ்த் தேசியவாதமாகவும் உருப்பெற்றன.
- ஈழத் தமிழ் இலக்கியம் சென்ற நூற்றாண்டுத் தொடக்கத்தினளவில் நவீனத்துவத்தை உள்வாங்கத் தொடங்கி விட்டது. நவீனத்துவம் நோக்கித் தமிழ் மொழியின் பெயர்வு, அதற்கு முன்னரே ஆங்கி லேயர் ஆட்சிக் காலத்தில் மிஷனரிமாரின் கல்வி முயற்சிகளின் தொடர்ச்சியாக நிகழ்ந்தது எனலாம். ஆறுமுக நாவலர் அதன் முக்கியமான ஒரு கருவியாக இருந்தார். எனினுந், தமிழ்ப் புலமை மரபு, மொழியிலும்— அதை விடத் தீவிரமாகப் பேசுபொருளிலும் —புதியன புகுதலை விரும்பாததாகவே இருந்தது.
- யாழ்ப்பாணக் குடாநாடே தமிழரது கல்வியின் மையமாக இருந்த தாற் தமிழ் இலக்கிய முயற்சிகள் பெருமளவும் அங்கிருந்தே தொடங்கினாலும், தனிப்பட்ட முக்கியமான முயற்சிகள் வெளியி லும் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கில இலக்கியத்தின் மூலம் நமக் குப் பழக்கப்பட்ட நெடுங்கதை வடிவமான 'நாவல்' முதலிலும் சிறு கதை பின்னரும் நம்மை வந்தடைந்ன. இத்தகைய இலக்கிய முயற்சிகள், ஒருபுறம் நமக்குப் பரிச்சயமான ஆங்கில இலக் கியங்களைப் பார்த்துச் செய்கிற போக்கைக் கொண்டிருந்தாலும், தமக்கான நோக்கங்களையுங் கொண்டிருந்தன. அவை சமுதாயத் தில் ஆதிக்கஞ் செலுத்திய அற விழுமியங்களை வலியுறுத்தின. எனவே தான் ஈழத் தமிழ்ச் சமுதாயத்தைப் பீடித்திருந்த இரண்டு முக்கியமான நோய்களான சாதியமும் ஆணாதிக்கமும் கேள்விக் குட்படக் காலமெடுத்தது. வர்க்கம் என்கிற சமூகப் பரிமாணம் இடதுசாரி இயக்கத்தின் எழுச்சியை ஒட்டியே இலக்கியத்திற் பதியப் பெற்றது. எனினும், நிலவுடைமைக்கால அற விழுமியங் களின் தொடர்ச்சியாக, மனிதாபிமானமும் பரோபகார உணர்வு களும், கொடுமைகட்கு எதிரான கருத்துக்களாகக் கருணை, பரிவு என்கிற கண்ணோட்டங்களில் வெளிப்பட்டன.
- தமிழகத்திற் சாதியத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் எதிரான காத்திர மான முதலாவது குரல் ஈ.வெ.ராவினது எனலாம். எனினும் சாதிக்

கொடுமைக்கு எதிரான சீர்திருத்தச் சிந்தனைகளும் பெண்களின் சமத்துவம் பற்றிய குரல்களும் அவருக்கு முதலே எழுந்துள்ளன. பாரதியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அவற்றை அடையாளப்படுத்தி னார். அவற்றின் எதிரொலிகள் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை ஒட்டி ஈழத்து இலக்கியப் பரப்பிலும் எழுந்தன.

- சமூகப் பிரச்சனைகளை முன்வைத்து இலக்கியம் படைப்பது எப்போது பரவலான இலக்கிய நடைமுறையானதோ, அப்போது தான் ஈழத் தமிழ் இலக்கியம் தனக்கான தனித்துவமான அடையா ளத்தை வெளிப்படுத்தியது. மறுமலர்ச்சி இயக்கம் இவ் வகையில் முக்கியமான ஒன்றாகிறது. எனினும் அதன் சமூக நோக்கும் இலக்குக்களும் மரபுசார்ந்த விழுமியங்களினின்று முற்றாக விடுபட இயலாதிருந்தன.

## தேசிய இலக்கியம்

ஈழத் தமிழ் இலக்கியம் இந்தத் தீவின் தனித்துவமான சமூக அமைப்பிற்கும் வாழ்விற்கும் அதில் வாழும் தமிழ்ப்பேசும் சமூகங் களின் மொழி வழக்கிற்கும் உரிய ஒன்றாக எடுத்த எடுப்பிலேயே தன்னை அடையாளங் காட்டிக் கொள்ளவில்லை. அது பேசிய விடயங் கள் இந்த மண்ணையும் மண்ணின் மக்களையும் பற்றியதாகவும் அமையத் தொடங்கிய போது, ஈழத்தின் தேசிய இலக்கியம் என்ற ஒன்று நிலை பெற்றுவிட்டது. (ஈழம் என்பது இலங்கை என்ற நாட்டைக் குறிப்பது என்பதையும் அது தமிழ்த் தேசிய இனத்திற்கு வரையறுக்கப்பட்டதல்ல என்பதையும் இவ்விடத்து வலியுறுத்துகிறேன்). எவ்வாறாயினும் அதன் மொழிநடை இலக்கணச்சுத்தமான மரபுத் தமிழுக்குரியதாக இல்லாதபோது தமிழகத்துப் பேச்சு மொழிக்கு நெருக்கமாகச் சென்றுள்ளமையை நாம் கண்டிருக்கிறோம். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று இந்தியா தாய்நாடு என்கிற சிந்தனையுடன் ஒட்டித் தமிழ் நாட்டில் அங்கீகாரம் பெறுவதை முக்கியப்படுத்தும் போக்கு. மற்றது இந்தியாவிலிருந்து பெரும் எண்ணிக்கையில் நூல்களும் சஞ்சிகைகளும் ஈழத்திற்கு இறக்கு மதியாகிப் பரவலாக வாசிக்கப்பட்டமை. எனவே, நமது படைப்பாளி களிற் சிலரது ஆக்கங்களிலேனும் தமிழகத்து அக்கிரகாரத்துத் தமிழ் வாடை இருந்த அளவுக்குக் கூட இந்த மண்ணின் பேச்சு வழக்கு இல்லாமலிருந்தது.

- தேசிய இலக்கியம் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளாமலே இந்த மண்ணில் நிலைகொண்டு விட்டாலும், அதை அடையாளப் படுத்தி அதை இந்த மண்ணின் மொழிநடையுடனும் வாழ்வுடனும் மேலும் இறுக்கமாகப் பிணைப்பதில் முற்போக்குச் சிந்தனை யாளர் கட்குப் பெரும் பங்கு இருந்தது. பேச்சுத் தமிழை நாடகங்கட்கான

மொழியாக்குவதற்காகக் குரல்கொடுத்துச் செயற்பட்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளை, மொழி பற்றிய முற்போக்காகன பல கருத்துக் களை உடையவராயரிருந்தார். இவ்வாறு பலரைக் குறிப்பிடலாம்.

- எவ்வாறாயினும் தேசிய இலக்கியம் என்ற கருத்தாக்கத்தை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்தை வலியுறுத்தும் நோக்கில் —தமிழ்நாட்டின் தமிழ் இலக்கியத்தினின்று வேறுபட்ட தாக ஆனால் எவ்விதமான பகைமைக்கும் இடமற்ற முறையில்— வலியுறுத்தியதில் ஈழத் தமிழ் இடதுசாரிகளதும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினதும் பங்கு பெரியது.
- தேசிய இலக்கியக் கோட்பாட்டின் முக்கியமான ஒரு பகுதியாகப் பேச்சு மொழிக்கான இடம் வலியுறுத்தப்பட்டது. தவிர்க்க இயலா மலே, அது மண் வாசைன, பிரதேச மொழி வழக்கு என்கிற திசைகளில் எழுத்தை நெறிப்படுத்தியது. இங்கு, இடதுசாரிகட்கும் தமிழ்த் தேசியவாதிகள் எனப்பட்டோர்க்குமிடையே முரண்பாடுகள் தோன்றின.
- தமிழ்த் தேசியவாதத் தலைவர்களுள் மிக முக்கியமான சிலர் பெருமளவும் ஆங்கிலத்திலேயே பேசுவோராகவும் முறையாகத் தமிழ் அறியாதோராயும் இருந்த போதும், தூய தமிழ், செந்தமிழ் என்கிற கருத்துக்களை வலியுறுத்துகிற போக்கு தமிழ்த் தேசிய வாதிகளிடையே வலுவாயிருந்தது. 1956ன் பின்பு, தம்மைத் தமிழின் காவலர்களாக நியமித்துக் கொண்ட பழமைவாதிகளும் தமிழரசுக் கட்சியினரும் நெருக்கங் கண்டனர். அதன் விளைவாக, முற்போக்கு இலக்கிய நெறி முன்னெடுத்த கருத்துக்கள் தொடர் பாக மட்டுமன்றிப், பேச்சுமொழியின் பாவனை, மண் வாசைன, தேசிய இலக்கியம் போன்றவை தொடர்பாகவும் பகைமையான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியவாதிகள் எனப்பட்டோர் மேற் கொண்டனர். அன்றைய முற்போக்கு இலக்கியம் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகப் பேசியதற்கும் மேலாக, ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினரிடையே இருந்து படைப்பாளிகளையும் உருவாக்கியது. அதன் விளைவாகவே, சிங்கள இலக்கியத்துடன் ஒப்பிடுகையில், தமிழ் இலக்கியத்தில் இடதுசாரிச் சிந்தனையின் பாதிப்பு கூடிய வலுவுடன் இருந்தது. பாராளுமன்ற அரசியல் அடிப்படையில் நோக்கினால், அற்பப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே கொண்டிருந்த போதும் இடதுசாரிகளின் இலக்கியப் பிரதிநிதித் துவம் பெரிதாக இருந்தது.
- இடதுசாரி இலக்கிய ஏடுகள் அதிக எண்ணிக்கையில் வராத போதும், கிடைத்த களங்களை எல்லாம் முற்போக்குப் படைப்பாளி கள் பயன்படுத்தினர். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் படைப்பாளி களை நெறிப்படுத்துவதில் நல்லதொரு பங்கு வகித்தது. பத்தி

ரிகையாளராகவும் பல்கலைக்கழக ஆசிரியராகவும் திறனாய்வாள ராகவும் கைலாசபதி ஆற்றிய பங்கு இவ்விடத்திற் குறிப்பிட வேண்டியதாகும்.

- தமிழ்த் தேசியவாதிகளிடம் இருந்த பொருள் வளமும் பிரசுர வசதிகளும் அரசியற் செல்வாக்கும் ஏன் ஒரு தமிழ்த் தேசியவாத இலக்கியப் போக்கை விருத்தி செய்து வலுப்படுத்தத் தவறியது என்பதைத் தமிழ்த் தேசியவாதத்தின் வர்க்க நிலைப்பாட்டின் அடிப்படையிலே விளங்கிக் கொள்ள இயலும்.
- இடதுசாரி எதிர்ப்பு, தமிழ்த் தேசியவாத எல்லைகட்கு வெளியிலும் செயற்பட்டது. தனிப்பட்ட முரண்பாடுகளும் சொந்த நலன்களும் இடதுசாரிகள் பற்றிய முற்சாய்வான சிந்தனைகளும் இலக்கியத் துறையிற் தமக்கான இடங்களைத் தேடிக் கொண்டன.
- எவ்வாறாயினும், 1956 அளவிற் தமிழ் இன உணர்வு மேலோங்கிய நிலைமைகளின் போதும், இடதுசாரிகளே தேசிய இலக்கியம், மண் வாசைன, சமுதாயச் சார்பான இலக்கியம் எனுமாறாகத் தமிழ்த் தேசியவாதிகள் முன்னெடுத்திருக்கக்கூடிய இலக்கியக் கொள்கை களை முன்வைத்து ஈழத் தமிழ் இலக்கியத்திற்கு உறுதியான ஒரு தளத்தை நிறுவினர். ஈழத் தமிழ் இலக்கியத்தை இழிவாகக் கருதிய தமிழக இலக்கிய மேட்டுக்குடிகட்கு எதிராக அவர்களே போர்க்கொடி எழுப்பினர். அவர்களது முயற்சியின் விளைவாகவே ஈழத்து இலக்கிய ஏடுகளாற் பொருள் நட்டமின்றி வெளிவர முடிந்தது.
- இடதுசாரிகள் முன்னெடுத்த மக்கள் சார்பான, மக்களது பேச்சு மொழியில் அமைந்த இலக்கியம் தமிழ்ப் பழமைவாதிகளாலும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்த இடதுசாரி விரோதிகளாலும் இழிசினர் இலக்கியம் என்று இழிவு செய்யப்பட்டதைத் தமிழ்த் தேசியவாதிகள் கண்டிக்கத் தவறினர்.

### முற்போக்கு இலக்கியம்

முற்போக்கு இலக்கியம் என்பது எப்போதும் இடதுசாரி இலக்கியமாக அமைந்ததுமில்லை அமைய வேண்டியதுமில்லை. நாறிப்போன பழமை களினின்று சமுதாயத்தை விடுவிக்கும் நோக்குடனும் அறஞ்சார்ந்த விழுமியங்களுடனும் அமையும் படைப்புக்கள் முற்போக்கு இலக்கியம் என்ற பரப்பினுள் அடங்குவதால் முற்போக்கு இலக்கியக் கோட்பாடு இடதுசாரிச் சிந்தனையுடையோரை இயல்பாகவே ஈர்த்தது.

- ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் தொடக்கப் பகுதி பொதுவாகச் சமுதாய விமர்சனமாகவே இருந்தது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக் குரல்களும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களும்

அதிற் பதிவாகின. சமூக நீதிக்கான கோரிக்கைகளாகவும் அன்றைய படைப்புக்கள் தம்மை அடையாளப் படுத்தின. சிறு கதைகளும் அடுத்தபடியாகக் கவிதைகளும் இடதுசாரிச் சிந்தனை யின் முக்கிய வாகனங்களாயின. ஈழத்து முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் தொடக்கக் நிலையில் கதைகளினளவுக்குக் கவிதை எழுச்சி பெறாமைக்கு 1970கள் வரை கவிதையில் மரபின் பிடி வலுவாக இருந்தமை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதுவே பிரதானமான காரணமென நான் நம்பவில்லை.

- எவ்வாறாயினும், 1964ம் ஆண்டு இலங்கை இடதுசாரி இயக்கத்தின் இரண்டு பிரதான கட்சிகளிலும் பிளவுகள் ஏற்பட்டதை அடுத்துப் புரட்சிகர அரசியல் மாற்றம் பற்றிய கருத்துக்கள் எழுச்சி பெற்றன. தமிழ் இலக்கியப் பரப்பில் கம்யூனிஸ்ற் கட்சியின் செயற்பாடு வலுவாக இருந்ததன் பயனாக, அக் கட்சியில் ஏற்பட்ட பிளவின் தாக்கம் தமிழ் இலக்கியப் பரப்பில் முக்கியமானதாக இருந்தது.
- டொமினிக் ஜீவாவின் தனிப்பட்ட முயற்சியின் விளைவாக மல்லிகை என்ற சஞ்சிகை இடையறாது வந்ததை விட்டால், பாராளுமன்ற இடதுசாரிகளின் வசமாகிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏறத்தாழச் செயலிழந்து போயிற்று எனலாம். போராட்ட இலக்கியச் சிந்தனைகள் தமக்கான களங்களைத் தேடிக் கொண்டன. 1966 ஒக்டோபரில் தொடக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கமும் அதன் போராட்டங்களும் தமிழ் இலக்கியத் தின் மீது ஏற்படுத்திய தாக்கம் பெரிது. கருத்தாழமும் உணர்ச்சி வேகமும் இணைந்த கவிதைகளை அப் போராட்டச் சூழல் இயலு மாக்கிற்று. நாடகம், சிறுகதை, நாவல் எனப் பிற வடிவங்களிலும் அப் போராட்டத்தின் தாக்கம் புலனாயிற்று.
- அதையொட்டிய காலப்பகுதியில் மலையத்திற் போர்க்குணமிக்க தொழிற்சங்க இயக்கமாகச் செங்கொடிச் சங்கம் செயற்பட்டது. மலையகத்தின் இடதுசாரி, முற்போக்குப் படைப்பாளிகட்கு அது ஒரு பெரும் ஊக்குவிப்பாய் இருந்த போதும், மலையகத்தின் படைப்புலகை விருத்தி செய்யக்கூடிய ஒரு சூழலின் உருவாக்கத் திற்குத் மலையகம் கல்வியிற் பின்தங்கியிருந்தமையும் தோட்டச் சமூக அமைப்பும் தடையாயிருந்தன. அத் தடைகளை மீறிப் போர்க்குணமிக்க படைப்புக்ளை ஈந்த படைப்பாளிகள் மலையகச் சூழலில் உருவாயினர் என்பது முக்கியமானது.
- தமிழ்த் தேசியத்தின் பழமைவாத நோக்கு முற்போக்கு இயக்கத்திற்கு ஈடுகொடுக்க இயலாமற் தடுமாறிய போதும், முற்போக்கு இலக்கத்திற்கு எதிரான முனைப்புக்கள் வெவ்வேறு வடிவங்களிற் தோன்றின. தூய அழகியல்வாதம் அவற்றுள் ஒன்று. அதன் வேர்கள் தமிழகத்தின் இடதுசாரி எதிர்ப்பாளர்களிடையிலும்

ஒரு பார்ப்பனிய வட்டத்தினுள்ளும் இருந்தன. அவற்றை விட, சி.ஐ.ஏ. நிறுவனம், என்கௌண்ட்டர் (Encounter) சஞ்சிகை மூலம் தூய அழகியல்வாதத்தைத் தூக்கிப் பிடித்தது. சி.ஐ.ஏயின் இலக்கிய முகவர்களாகச் செயற்பட்டோர், மிகவுங் காலங்கடந்து, 1980களிலேயே அம்பலப்படுத்தப் பட்டனர். இன்று வரை, இடதுசாரி எதிர்ப்பு என்பதை மட்டுமே நோக்காகக் கொண்ட ஒரு இலக்கியக் கூட்டணி தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது என்பதையும் அது சமூகப் பொதுநோக்கற்ற சில இலக்கிய விக்கிரங்களை முன்னிறுத் தித் தனது வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளது என்பதுங் கவனத்துக்குரியன.

### தமிழ்ப் பேசும் தேசிய இன அடையாளங்களும் பிரதேச அடையாளங்களும்

இலங்கைத் தமிழ் இலக்கியம் தமிழகத்தின் தமிழ் இலக்கியத்தினின்று தனது தனித்துவத்தை நிலை நிறுத்தியமை எவ்வளவு சரியானதோ அதே அளவுக்குப் பிரதேசமும் மதமும் பண்யாடும் சார்ந்த வேறு பாடுகள் இலக்கியத்தில் அடையாளம் பெறுவது சரியானது. ஏனெனில் இவ் வேறுபாடுகள் மொழி வழக்கில் —முக்கியமாகப் பேச்சு மொழி வழக்கில்— தம்மை வெளிப்படுத்துகின்றன. இவை தவறான பிர யோகங்களல்ல. இவை சமுக அங்கீகாரம் பெற்ற, தமிழின் வட்டார வழக்குக்கள். ஒரு பிரதேசத்தை அடையாளப் படுத்தும் ஒரு படைப்பில் அதற்கு முக்கியத்துவமுண்டு. இன்று முஸ்லிம்களும் மலையகத் தமிழ் மக்களும் தம் தனித்தவமான தேசிய இன அடையாளத்தை வலி யுறுத்தி நிற்கிற சூழலில் மேற்கூறியவாறான தனித்துவங்கள் மேலும் முக்கியமாகின்றன.

- தேசிய இலக்கியக் கொள்கையை முன்னெடுத்த முற்போக்கு இலக்கியவாதிகள் பிரதேச மொழி வழக்கிற்கும் பேச்சு மொழிக்கும் முக்கியத்துவம் வழங்கியமை முற்கூறிய அணுகுமுறைக்குரியது. அவ் அணுகுமுறை தமிழ்த் தேசியவாதம் சார்ந்து நின்ற பழமை வாதப் போக்கிற்கு உடன்பாடாக இருக்கவில்லை.
- குறுகிய தமிழ்த் தேசியவாதத்ததுடன் இணைந்து நின்ற பழமை வாதப் பிற்போக்குச் சிந்தன படைப்பிலக்கியத்தில் சாதரரண மக்களின் மொழி வழக்கை நிராகரித்து இழிசினர் இலக்கியம் என ஏளனஞ் செய்தது. அதன் விளைவாகக் கடும் போராட்டங்கள் நிகழ்தன. தற்போது மேட்டுக்குடி இலக்கியவாதிகளுடனும் பழமை வாதிகளுடனும் சமரசம் செய்துகொண்டுள்ள அன்றைய 'முற்போக் காளர்கள்' சிலர் அப் போராட்டங்களிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ள எடுக்கும் முயற்சிகள் பரிதாபமானவை.

- பேச்சு மொழியின் இலக்கியத் தகைமை ஏற்கப்பட்டமை, அதனுடைய தர்க்கரீதியான வழிச் சென்று வெவ்வேறு சமூக மொழிவழக்குக்களது சமத்துவத்தையும் ஏற்பதாகியது. வரலாற்றுச் சூழ்நிலைகளாற் தம்மைத் தனித் தேசிய இனங்களாக இனங் கண்டு அந்த அடையாளங்களை விருத்திசெய்ய முனைந்து நிற்கும் முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கட்கு அந்த ஏற்புடைமை ஒரு ஊக்கியாகச் செயற்பட்டது.
- எவ்வாறு ஈழத் தமிழ் இலக்கியம் தனது தனித்துவத்தை நிலை நாட்டியதோ அவ்வாறே —அதே அளவு உரிமையுடன்— ஈழத்தின் தமிழ்ப்பேசும் தேசிய இனங்களின் இலக்கியங்கள் தமது தனித்து வத்தை நிலைநாட்ட முடிந்தது. அத்துடன் அவ்வத் தேசிய இன அடையாளங்கட்கு உரிய பிரதேச அடையாளங்களையும் பெருமை யுடன் பேண இயலுமாயிற்று.
- ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்கள் முற்போக்கு இலக்கிய இயக்கத் தில் பெரும் பங்காற்றியோராவர். அவர்களின் படைப்புலகு பெருமளவும் மதச்சார்பற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர் நிலை நின்று உலகை நோக்குவதாகவும் அமைந்ததற்கு முஸ்லிம் நவீன இலக்கிய முன்னோடிகள் முற்போக்கு இலக்கிய முகாமைச் சேர்ந்தோராயும் பெருமளவில் புரட்சிகர மாக்ஸியத்திற்கு அனுதாப மானோராயும் இருந்தமை ஒரு காரணமாயிருந்திருக்கலாம். இலங்கை இடதுசாரி இயக்கத்தின் சரிவும் குறுந் தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியும் முஸ்லிம் தேசியவாதத்தின் எழுச்சிக் கும் மத அடையாளத்தின் முதன்மைப்படுத்தலுக்கும் உதவி யுள்ளன. எனினும் தீவிரமான மதவாதம் இன்னமும் இலக்கியத்தில் வலுவாக வேரூன்றவில்லை என்றே தெரிகிறது.
- மலையக எழுத்து அதன் வேறுபட்ட சமூகச் சூழல் காரணமாக எப்போதுமே தனது தனித்துவத்தை வெளிப்படுத்தி வந்தாலும் அதன் தனித்துவத்தை வலியுறுத்தி ஊக்குவித்ததில் கைலாச பதியின் பங்கு குறிப்பிட வேண்டியது. ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை நின்று இலக்கியம் படைக்கப்படுவதில் இடதுசாரி அரசிய லின் பங்கு பெரியது. புதிய நடுத்தர வர்க்கமொன்றன் எழுச்சி வர்க்க அடையாளத்தைக் குறைத்துப் பிரதேச அடையாளத்தை முதன்மைப்படுத்துவதற்கு இடதுசாரி இயக்கத்தின் நலிவு ஒரு முக்கிய காரணமென்றே கூற வேண்டும்.
- மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசப் பண்பாட்டு அடையாளங்கள் மண்வாசைன இலக்கியம் என்ற நிலையிலிருந்து உயர்ந்து ஆக்க இலக்கியத்தினூடு தெளிவாகவும் உறுதியாகவும் தம்மை அடை யாளப்படுத்தியுள்ளன. சமூக, அரசியற் தளங்களில் பிரதேச வாதம்

தன்னை அடையாளப்படுத்திய அளவுக்கு இன்னமும் ஆக்க இலக்கியத்திற் தன்னை அடையாளப்படுத்தாமை கவனிக்கத்தக்கது.

- தென்னிலங்கையிற் தமிழரின் வதிவு இலக்கியப் படைப்புக்களிற் தன்னை அடையாளப் படுத்தியபோதும் அது தனக்குரிய தனித்துவமான இடத்தைப் பெறவில்லை. வடக்கு கிழக்கிற்கு வெளியே உருவாகும் படைப்புக்களில், மலையக அடையாளத் தினளவுக்கு பிற பிரதேசங்களிற் தமிழரின் இருப்பு தன்னை வலி யுறுத்தியுள்ளதாகக் கூற இயலாது. இது பற்றி வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ்ப் படைப்பாளிகள் சிந்திக்க வேண்டும்.
- ஒரு சமுகத்திற் கணிசமானோரின் புலப்பெயர்வு சமுகத்தின் இலக்கியச் செல்நெறியிற் தீர்மானமான சில மாற்றங்களைக் கொண்டுவருகிறது. புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஒருபுறம் தாய்மண்ணின் இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் இன்னொருபுறம் புதிய வாழ்க்கைச் சூழலை வரித்துக் கொள்ளும் போக்கிலான அனுபவங்களின் பதிவாகவும் அமைகிறது.
- சில ஆண்டுகள் முன்புவரை சிலர் ஈழத்துத் தமிழ்ப் புலம் பெயர்ந்தோர் இலக்கியமே தமிழ் இலக்கியத்தின் உச்சமாக அமையும் என்று பேசிவந்தனர்— அது அறியாமையின் விளைவோ அன்றிக் கபட நோக்குடையதோ என்று கூறுவது கடினம் —ஆனால் அது இப்போது ஓய்ந்துவிட்டது. உயர்வாகப் பேசப்பட்ட சில படைப்புக்களின் தோற்றத்திற்குப் படைப்பாளிகள் தம் கடந்தகாலத்தை ஒரு மாற்றுக் கண்ணோட்டத்தில் காணும் வாய்ப்பைப் புலப்பெயர்வு அவர்கட்கு வழங்கியமை பங்களித்தது எனலாம்.

## தமிழ்த் தேசியவாதத்தின் தாக்கம்

- தமிழ் இன உணர்வு தமிழ்த் தேசியவாதமாக எப்போது உருப் பெற்றது என்பதைப் பற்றிக் கருத்துக்கள் வேறுபடலாம். சிங்களம் மட்டுமே சட்டத்தை அடுத்து வீறு கொண்ட மொழியுணர்ச்சி 1956 முதல் 1961ம் ஆண்டின் சத்தியாக்கிரகம் வரை கவிதைகளாகவும் இசைப்பாடல்களாகவும் வடிவம் பெற்றது. புனைகதைகளிலும் மொழியுணர்வு பதிவு கண்டாலும் அது ஒப்பிடத்தக்க வளர்ச்சியை எய்தவில்லை என்பேன். 1965-70 கால இடைவெளியிற் தமிழ் இன உணர்வும் அதை முன்னிறுத்திய கட்சியின் நடைமுறை அரசிய லும் விலகி இருந்தன. தமிழ் மக்களின் குறைபாடுகளில் எவையும் இக் காலத்திற் தீராவிட்டாலும், தமிழ்த் தேசியவாத அரசியற் தலைமை சிங்களப் பேரினவாதத்தின் அதி பிற்போக்கான கட்சி யுடன் கூட்டரசாங்கத்தில் இருந்தமை தமிழ் மக்களின் உரிமைப்

போராட்டத்தைக் கிடப்பிற் போடச் செய்தது. அந்த நிலைமை இலக்கியத்திலும் புலப்பட்டது.

- 1970ல் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. தமிழ்த் தேசியவாதி களுடனான பகைமையும் ஸ்ரீ.ல.சு. கட்சி சந்தர்ப்பவாத நோக்கிற் கிளறிவிட்ட பேரினவாதமும் அதனை எதிர்க்கத் தைரியமற்ற பாராளுமன்ற இடதுசாரிகளின் கோழைத்தனமும் 1970முதல் 1977 வரையிலான ஆண்டுகளிற் பல தவறுகட்குக் காரணமாயின.
- தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம், தமிழருக்கு எதிரான பாரபட்சம் போன்ற பலவும் வடக்கிற் தமிழ் இளைஞர்கள் நடுவே கொதிப்புணர்வை ஏற்படுத்தின. அதே வேளை, தமிழ்த் தேசியவாதிகளின் காந்திய சாத்வீகத் தலைவர்களது ஆசிகளுடன் நடந்த, முன்னாள் மாநகராட்சித் தலைவர் துரைப்பாவின் கொலை பொலிஸ் கெடுபிடிகளை மேலும் அதிகப்படுத்தியது. பொலிஸ் வன் முறையையும் இளைஞர்களது ஆயுத வன்முறையும் அதன் பின் விளைவுகளாயின. 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு நாட்டின் தேசிய இனப் பிரச்சனையை மோசமாக்கியது. அதற்கு எப்படி முகங்கொடுப்பது என்ற அரசியற் தெளிவில்லாமல் 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனம் தமிழ்த் தேசியவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று ஒரு குறுகியகால அரசியல் வசதிக்காக முன் வைக்கப்பட்ட சுதந்திரத் தமிழீழம் என்ற இலக்கு, இன்று வரை ஒரு சரியான நெறிப்படுத்தலுமின்றித், தமிழ் மக்களை மேலும் இன்னலுக்கும் அழிவுக்கும் பிளவுகட்கும் சிதறலுக்கும் வழிசெய்து வந்துள்ளது.
- இத்தகையதொரு பின்னணியிலேயே, வடக்கில் முதலிலும் கிழக்கிற் பின்புமாக, முக்கியமாக இளைய தலைமுறையின ரிடையே, தமிழ்த் தேசியவாதம் வேரூன்றியது. அது காத்திரமான இலக்கியப் படைப்புக்களாக வெளிப்பட்டது கவிதையிலேயே. புதுக் கவிதை ஈழத் தமிழிலக்கியத்திற் தடம் பதித்தமை அதற்கு முக்கியமான பங்களித்தது. தேசிய இன ஒடுக்கல் கடுமையான அரச வன்முறையாகவும் இனவாதத் தாக்குதல்களாகவும் விருத்தி கண்ட 1977க்குப் பிற்பட்ட காலத்தின் இலக்கியப் பதிவுகளில் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்ட உணர்வு முக்கிய இடம் பெற்றது. கவிஞர்கட்கும் மேலாகக் குறிப்பிடத்தக்க சிறுகதை ஆசிரியர்களும் அடையாளங் காணப்பட்டனர்.
- பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதமும் 1970-77 ஆட்சிக் காலத்தில் அவர்கள் பேரினவாதிகளுடன் அடையாளங்காணப் பட்டமையும் அவர்களை மட்டுமன்றி அனைத்துத் தமிழ் இடது சாரிகளையுமே பாதித்தது. தேசிய இனப் பிரச்சனை பற்றி நேர்மை யான இடதுசாரிகள் முன்வைத்த தீர்க்கதரிசனமிக்க கருத்துக்களாற்

பேரினவாத அலைக்கும் அதற்கு எதிராக எழுந்த குறுகிய தேசியவாத அலைக்குமிடையே ஓங்கி நிற்க இயலவில்லை. எனினும் இடதுசாரி இலக்கியம் தனது நிலைப்பாட்டிற் உறுதியுடன் தொடர்ந்தும் இயங்கி வந்தது. இருந்தும், 1970களில் இருந்து மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ற்றுக்களிடையே ஏற்பட்ட பிளவுகள் இடதுசாரி இலக்கியத்தின் வளர்ச்சியைக் கணிசமாக மந்தப் படுத்தின. அதைவிட முக்கியமாக, இடதுசாரிகளை அரசியலினின்று ஓரங்கட்டுவதில் இளைஞர் இலக்கங்களிற் பெரும்பாலானவை தீவிரமாயிருந்தன. விடுதலைப் புலிகளின் ஆதிக்கமும் பின்பு அரசியல் ஏகபோகமும் நிலவிய காலத்தில் மிகுந்த இடர்ப் பாடுகளின் நடுவிலேயே இடதுசாரிகளின் கலை இலக்கிய முயற்சி களை வடக்கில் முன்னெடுக்க இடமிருந்தது. தேசிய கலை இலக்கியப் பேரவை மூலமே முற்போக்காகன சமூக அரசியற் சிந்தனைகளை மக்கள் நடுவே கொண்டு செல்ல முடிந்தது.

- தமிழ்த் தேசியவாதம் போர்க்குணமிக்க ஒரு போராட்டச் சக்தியாக உருப்பெற்ற காலத்திலேயே ஈழத் தமிழ்க் கவிதையின் ஒரு பேரெழுச்சி நிகழ்ந்தமை கவனிக்கத் தக்கது. அதன் மூலம் உணர்த்தப்பட்ட கருத்துக்கள் 1960கள் வரையிலான ஆண்ட பரம் பரைக் கதைகளினின்று விலகியவையாய் இருந்தன. கவிதைகள் அன்றாட நிகழ்வுகள் பற்றியும் அவை மனதில் எழுப்புகிற தாக்கங் களைப் பற்றியும் பேசின. போராட்டம் பற்றிப் பேசின. சமூக நீதி பற்றிய குரல்களும் இடையிடை எழுத்தன. தேசிய வாதம் பற்றிய விமர்சனங்ளுக்கும் போராட்டத்தின் செல்நெறி பற்றிய வினாக்க ளுக்கும் இடமிருந்தது. எனினும் 1983க்குப் பின்பு— அதாவது இந்திய எசமானர்கள் ஈழக் தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தத்தெடுத்ததன் பின்பு —தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியச் செல் நெறியும் பெரும் பாதிப்பிற்குட்பட்டன.
- தமிழ்த் தேசியவாதத்தையும் தமிழீழப் பிரிவினைக் கொள்கை யையும் கேள்விக்கு உட்படுத்த இயலாது என்று— துப்பாக்கி தூக்கிய இளைஞர்களைவிடத் தீவிரமாகச் —சில பேனை தூக்கிய இலக்கியவாதிகள் மிரட்டத் தொடங்கிய காலம் ஈழத் தமிழ் இலக்கியத்தின் நலிவின் தொடக்கப்புள்ளி என்பேன்.
- அந்தப் போக்கையும் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட நலிவுமிக்க இலக்கியச் சூழலையும் விவரிக்கஇங்கு இடம் போதாது. அவற்றைப் பற்றிய முக்கியமான பல தகவல்கள் இன்னும் பலரும் அறியாதவையாகவே உள்ளன.
- தமிழ்த் தேசிய இனத்துக்கு நடந்தவாறே, இடதுசாரி இயக்கத்தின் நலிவு முஸ்லிம்களின் படைப்புலகிலும் ஒரு தேக்கத்தைக் கெண்டு

வந்தது. குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியும் அதற்குப் பங்களித்தது.

- எனினும் 1980களின் போக்கில் புதியதொரு முஸ்லிம் படைப்பாளித் தலைமுறை உருவானதைக் காணலாம். அதன் பார்வை முஸ்லிம் சமூகம் முகங்கொடுத்த குறுகிய தமிழ்த் தேசியவாதத்தாலும் இன்னொருபுறம் உலகளாவி வளர்ந்த இஸ்லாமிய உணர்வெழுச்சி யினாலும் பாதிக்கப்பட்டது.
- விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கிற் தமிழ்த் தேசிய வாதத்தின் போர்க்குணமிக்க படைப்புக்கள் உருவான அதேவேளை, சமூகச்சார்பான படைப்புக்களும் ஓரளவுக்கேனும் வெளிவந்தன. மறுபுறம், போராட்டத்தின் திசைவிலகல்கள் போராட்டத்தையே நிராகரிப்பது வரையிலான விமர்சனப்போக்கான படைப்புக்களுக்கு வழிசெய்த போதிலும் அவற்றின் பயனான பிரதேசவாதம் இலக் கியத்திற் தன்னை வலுவாக அடையாளப் படுத்தியதாகத் தெரிய வில்லை.

முற்போக்கு இலக்கிய இயக்கத்தினுடாகத் தன்னை வலுவாக நிலை நிறுத்திச், சமூக அக்கறைகளை வெளிப்படுத்திவந்து, தேசியவாதத்தின் எழுச்சியையொட்டிக் திசை மாற்றங் கண்ட ஈழத் தமிழ் இலக்கியத்தின் சமகால நிலையைத் தமிழர் விடுதலைப் போராட்டம் என்கிற துன்பியல் நாடகத்தின் பின்பான சூழலில் மீள நோக்குவோம்.

## இன்றைய ஈழத் தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு கணக்கெடுப்பு

தேசிய இனப் பிரச்சனை பிரதான முரண்பாடாக உருப்பெற்ற 1970களின் பிற் பகுதியிலிருந்து ஈழத் தமிழ் இலக்கியத்தில் அதுவே மிகுந்த கவனிப்பிற்கு உரித்தானதில் வியப்பில்லை எனினும் தேசிய இனப் பிரச்சனை தவிர்ந்த பிற முரண்பாடுகளைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்கிற அல்லது தடுக்கிற ஒரு போக்கும் —அதற்கு மாறாகத்— தேசிய இனப் பிரச்சனைக்கும் பிற முரண்பாடுகட்குமிடையிலான உறவுகளைக் கருத்திற் கொண்டு பேசுகிற ஒரு போக்கும் எப்போதுமே இருந்து வந்தன. முன்னையது தமிழ்த் தேசியவாத மரபின் இறுக்கமான தொடர்ச்சியாகவும் பின்னையது இடதுசாரிச் சிந்தனையின் தாக்கங்களை உள்வாங்கியதாகவும் இருக்கக் காணலாம்.

- தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒற்றுமை என்பது ஒரே குரலிற் பேசுவது, ஏகப் பிரதிநிதித்துவம் என்கிற விதமாக விகாரப்படுத்தப்பட்ட சூழலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் அவர்களது செல்வாக்கு வலுவாயிருந்த சூழல் களிலும் மாற்று அரசியற் கருத்துக்கள் பகைமையுடன் நோக்கப்பட்ட அளவுக்குப் படைப்பிலக்கியங்கள் நோக்கப்படா

விடினும், படைப்பாளிகள் விடுதலைப் புலிகளின் ஏகபோக உரிமைக்கு முரணாகச் செயற்படுவதற்கு இடமளிக்கப்படவில்லை.

- அதன் விளைவாக வெறுமனே இயக்கத்தினதும் தலைமையினதும் துதிபாடுகிற ஒரு போக்கு உருவானது. அவற்றின் நடுவிலும் மக்களது இன்னல்கள் பற்றியும் தமிழ்த் தேசியவாதத்திற்கு முரண்படாத விதமாகப் பெண்ணுரிமை போன்ற விடயங்களைப் பற்றியும் பேச இடம் இருந்தது. ஏகாதிபத்தியத்தைப் பற்றியோ உலகின் பிற விடுதலைப் போராட்டங்களைப் பற்றியோ பேசப் படாமை ஒரு முக்கியமான விடயமாகும்.
- இந்தத் தமிழ்த் தேசியவாத நாணயத்தின் மறுபக்கமாக விடுதலைப் புலி எதிர்ப்பு நோக்கிலான இலக்கியப் போக்கொன்று இருந்து வந்தது. இது தென்னிலங்கையிற் தம்மை ஓரளவு பாதுகாப்பாகப் பேணிக்கொண்டிருந்தோரிடையிலும் புலம் பெயர்ந்தோரில் ஒரு பகுதியினரிடையிலும் காணப்பட்டது. இது வளமான இலக்கியமாக வளரவில்லை.
- விடுதலைப் போராட்டத்தையே நிராகரிக்கிற இலக்கியப் போக்குக் கள் முன்னார் விடுதலை இயக்க ஆதரவாளர்களிடையிலும் உறுப் பினர்களிடையிலும் இருந்து வந்துள்ளமை கவனத்திற்குரியது.
- எவ்வாறாயினும், இலங்கையுள் போர்ச் சூழலுக்கு வெளியிலும் புலம் பெயர்ந்த சூழலிலும் புற நெருக்குவாரங்களின்றித் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நிதானமாக நோக்கி விசாரித்து விமர்சிக்கிற வாய்ப்புக்களைப் பயன்படுத்தியவர்கள் இருக்கின்றனர். அவ்வாறானவர்களின் பார்வை இன்னுந் தொலைவுகளை எட்ட வேண்டி உள்ளது.
- இடதுசாரி இலக்கிய மரபு தொடர்ந்தும் சிறுபான்மைப் போக்கா கவே உள்ளது. எனினும் ஏகாதித்திய எதிர்ப்பு, தேசிய இனங் களின் சமத்துவமும் நல்லுறவும், புதிய பண்பாடு என்னுமாறான கருத்தாங்களை அது தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிற போதும் கடந்த சில ஆண்டுகளின்இடப்பெயர்வுகளும் இளைய தலைமுறை யினரிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதும் முக்கியமான பிரச்சனைகளாக உள்ளன.
- இவ்விதமான நிலைமைகளின் நடுவே என்.ஜி.ஓக்கள் எனும் தன்னார்வக் குழுக்கள் மூலம் அரசியற் சிந்தனைகளையும் செயற் பாடுகளையும் மக்கள் இயக்கங்களையும் மழுங்கடிக்கும் முயற்சி கள் கடந்த இருபது ஆண்டுகட்கும் மேலாகத் தீவிரப் படுத்தப் பட்டுள்ளன. என்.ஜி.ஓ. நிதி ஆதரவை நேரடியாகவோ மறைமுக மாகவோ பெற்று நடத்தப்படுகிற சஞ்சிகைகள் பல உள்ளன. அதைவிடச் சமூகப் பிரச்சனைகள் பலவற்றைப் பற்றி ஆராய்வ தற்கும் வற்புறுத்துவதற்கும் சமூக சேவைகட்கென்றும் உருவாக்கப்

பட்ட என்.ஜி.ஏக்கள் வழங்கும் பெரிய ஊதியங்களுஞ் சலுகைக ளும் பல நல்ல படைப்பாளிகளைச் சோரம் போகச் செய்துள்ளன. இவற்றுக்கும் மேலாக விஞ்ஞான அடிப்படை யிலானதும் சமூக மாற்றத்துக்குமான முயற்சிகட்கு ஆப்புவைக்கும் இலக்குடன் பின் நவீனத்துவம் தீவிரமாக ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளது.

- நீதிக்கான போராட்டங்கள் பின்நவீனத்துவ நியாயப்படுத்தல்கள் மூலம் தனிமைப் படுத்தப்படுவதுடன் ஒன்றுக்கொன்று பகைமை யாக்கப்படுகின்றன. தமிழகத்திலும் புலம் பெயர்ந்த சூழலிலும் “தலித்தியம்” இவ்வாறு பயன்படுகிறது. எல்லாவிடத்தும் நடுத்தர வர்க்கப் பெண்ணியம் இடதுசாரி எதிர்ப்பிற் தீவிரமாக உள்ளது.
- ஈழத் தமிழ் இலக்கியத் துறையில் நூல் வெளியீடும் சஞ்சிகை களின் வருகையும் குறைவாக உள்ள நிலையில்— அதினும் முக்கியமாக நூல்களின் வாசிப்பும் விற்பனையும் குறைவாக உள்ள நிலையில் —இந்திய வணிக நிறுவனங்கள் உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த சூழலிலும் தமது லாப வேட்டையில் மும்முர மாயுள்ளன. இலங்கையிலிருந்து இன்னமும் வணிக அடிப்படையிற் தமிழ் நூல்களை இறக்குமதி செய்ய இயலாதவாறு இந்தியாவிற் தடை தொடருகிறது. ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யத் தடை இல்லை. இது இலங்கை நூல் வெளியீட்டுத் துறையைப் பெரிதும் பாதிக்கிறது.
- புலம் பெயர்ந்த ஈழத் தமிழரது மன உளைச்சல்களைத் தமக்குச் சாதகமாக்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வைத்து இந்தியா வின் பல விதமான சஞ்சிகைகள் கொள்ளை லாபம் ஈட்டுகின்றன. போதாததற்குத் தமிழகத்தின் குப்பைச் சஞ்சிகைகளும் கீழ்த்தர மான சினிமாவும் அதற்கு ஈடான சின்னத்திரைத் தொடர் நாடகங் களும் ஈழத் தமிழரதும் புலம் பெயர்ந்தோரதும் ரசனையைச் சிதைத்து வருகின்றன.
- இன்னொரு புறம், மரபின் பேரால் ஒரு பகுதியினரும் நவீனத் துவத்தின் பேரால் இன்னொரு பகுதியினரும் தமிழ்க் கலை இலக்கியப் பண்பாட்டு விருத்திக்குத் தீங்கான ‘கலை’ நிகழ்ச்சி களை நடத்துகின்றனர்.
- இவை அனைத்தின் நடுவிலும் நாம் நமக்கான ஒரு வாழ்வையும் பண்பாட்டையும் உடையோம். அவை காலத்துடன் மாறுவன. ஆயினும் அவை நமது இருப்பும் நலனும் விருத்தியுஞ் சார்ந்தவை யாயிருக்க வேண்டும். இந்தத் தேவையை நாம் தனி மனிதர் களாகவும் ஒட்டுமொத்தமான சமூகங்களாகவும் சமூகப் பிரிவுக ளாகவும் மறந்து போகும் அபாயம் நம்மை எதிர் நோக்குகிறது.

- ஈழத்து இலக்கியம் எவரது அங்கீகாரத்தையும் எதிர்பாராமற் தலை நிமிர்ந்து பெருமை கொண்ட ஒரு காலம் இருந்தது. இன்று இந்திய இலக்கிய வணிகர்களின் தயவில் நூல் வெளியிட்டு நட்டப் பட்டு முட்டாள்களாகிற நிலையில் ஈழத்துப் படைப்பாளிகள் பலர் இலங்கையிலும் புலம்பெயர்ந்தோரிடையிலும் உள்ளனர். (இவ் வணிகத் தொடர்புகளைப் பயன்படுத்தித் தம்மை வளப் படுத்ததிக் கொள்ளத் தெரிந்த இலக்கியப் பிரமுகர்கள் சிலர் உள்ளனர் என்பது வேறு விடயம்).
- தமிழக இலக்கிய மேட்டுக்குடி நிறுவனங்களின் அங்கீகாரத்துக் காகத் தவங்கிடக்கும் வட்டங்களும் தனிமனிதர்களும் அந்த நிறுவனங்களின் அற்ப அங்கீகாரங்களையே தமது தகுதிகளாக்கித் தம்மை ஈழத்து இலக்கியப் பிரமுகர்களாகக் காட்சிப்படுத்துகிற போக்குப் புதியதல்ல. எனினும் தேய்ந்து போன அப் போக்கு மீண்டும் உயிர்த்துப் போருக்குப் பின்பான சூழலில் வலுப்படும் அபாயம் கவலைக்குரியது.
- ஏற்றத்தாழ்வுமிக்க ஒரு சமூகத்தின் இலக்கியத்தில் மேலாதிக்கப் போக்குக்கள் இயல்பானவை. சான்றோர் வழக்கு v இழிசினர் வழக்கு என்ற ஆதிக்க உறவு முறியடிக்கப்பட்டாலும், சமூகத்தில் உட்பொதிந்துள்ள அதிகார உறவுகளை அடையாளப்படுத்தும் விதமாகப் பொருளாதார அரசியல் அதிகார உயர்வுதாழ்வுகளும் பெரும்பான்மை-சிறுபான்மைப் பாகுபாடுகளும் குறிப்பிட்ட வட்டார வழக்குக்களை உயர்த்தியும் பிறவற்றைத் தாழ்த்தியும் காணும் போக்காக இன்னமும் தொடர்கின்றன. இது போராடி வீழ்த்தப்பட வேண்டியது.
- சில சமயங்களில் மேற்கூறிய மேலாதிக்கப் போக்குக்கட்கு எதிர் வினையாகவும் சில சமயங்களில் சுயலாபங் கருதியும் குறுகிய தேசியவாதமும் பிரதேசவாதமும் இலக்கியத்தில் வெளிப்படு கின்றன. இதுவும் தோற்கடிக்கப்பட வேண்டியது எனினும், கவன மாகக் கையாளப்பட வேண்டியது. ஏனெனில் ஒடுக்குதலுக் கெதிரான ஒரு போராட்ட நியாயம் அங்கு இருக்கக் கூடும்.

### நாம் செய்யக் கூடியவை யாவை?

“ஈழத் தமிழ் இலக்கியத்தில் கவிதைகள் சிறப்பாகவும் சிறுகதைகள் ஏற்கத்தக்கனவாயும் உள்ளபோதும், நாவல் இலக்கியம் பலவீனமாக உள்ளது” என்ற விதமான கவலைகள் முக்கியமானவையல்ல. ஈழத் தமிழில் ஒரு வகையான இலக்கிய வடிவத்திற் சிறப்பாகச் செய்ய இயலுமாயின், பிறவற்றிலும் அவ்வாறு இயலும். எனவே நம் அக்க றைகள் நம் இலக்கியங்களின் நோக்குப் பற்றியதாகவும் அவற்றின்

சமூகப் பெறுமதி பற்றியதாகவும் இருப்பது முக்கியமானது. உருவத்தை விட உள்ளடக்கமும் செய்நேரத்தியும் மக்களைச் சென்றடையும் ஆற்றலும் முக்கியமானவை. அழகியல் என்பது படைப்பின் நோக்கத்தினின்று முற்றாக விலக்கிப்பார்க்கக் கூடிய தனித்துவமானதொரு பொருளல்ல.

- பலவிதமான நவீன இலக்கிய வடிவங்களும் எழுத்து முறைகளும் பரீட்சார்த்த முயற்சிகளும் போதாமையைச் சிலர் ஒரு குறையாகக் கூறுகின்றனர். இது இலக்கியம் பற்றிய ஒரு குழப்பமான கொள்கையின் விளைவானது. புதிய எழுத்து நடைகள், உத்திகள் போன்ற அனைத்தும் எழுத்தைச் சுவைப்படுத்துவன. ஆனால் எழுத்திற்கு அடிப்படையானவை அல்ல. எந்தப் புதுமையும் புத்தாக்கமும் வாசகரைச் சேர்கிறதா என்பதும் சொல்ல எண்ணியதைச் செம்மையாகச் சொல்கிறதா என்பதும் முக்கியமானவை. சொற் சிலம்பங்களும் இருண்மையுமே இலக்கிய ஆளுமையின் அளவு கோல் என்ற சிந்தனை பிற்போக்கான பழமைக்குரியது.

- நாம் எல்லாருடனும் பகிர வேண்டிய அனுபவங்களும் சிந்தனைகளும் உள்ளன. அனைவரும் அறிய வேண்டிய பொது உண்மைகள் உள்ளன. நமது சமூகம் பற்றி அறிய வேண்டியன உள்ளன. நமக்கு நடந்தனவும் நடப்பனவும் பற்றி மனத் தடைகளின்றி எடுத்துரைக்கவேண்டியன உள்ளன. நம்மைச் சூழவுள்ள சமூகங்களைப் பற்றி அறிய வேண்டியன உள்ளன. நாம் காண விழைகிற உலகம் பற்றிய சிந்தனைகளைப் பிறரது சிந்தனைகளுடன் மோதியும் இணைந்தும் புதிய பார்வைகளை உருவாக்க வேண்டியுள்ளது. பல சமயங்களில் ஆய்வுக் கட்டுரைகளும் பட்டிமன்றங்களும் கருத்தரங்குகளும் செய்ய இயலாதவற்றை ஆக்க இலக்கியம் செய்கிறது. எனவே ஆக்க இலக்கியத்தை அனைவர்க்கும் உரிய ஒரு பொருளாக்க வேண்டியுள்ளது. நாம் கொண்டிருந்து இழந்துபோன வாசிப்புப் பழக்கத்தை மீளவும் வென்றெடுத்து நமதாக்க வேண்டிய தேவை உள்ளது.

- நமது இலக்கியம் முதலில் நம்மைப் பற்றியது. நம்முடைய சகோதரச் சமூகங்களைப் பற்றியது. நம்மைச் சூழவுள்ள உலகுடன் நமது உறவு பற்றியது. நமது பெருமைகட்கு உரியதாகக் கூறப்படுகிற இலக்கியங்கள் நம்மை அடையாளப்படுத்தா. நமது வரலாறு பற்றிய பலவேறு புனைவுகள் நமது சமகால இருப்பாகா.

- பல நூற்றாண்டுகளாக் நம்மைப் பீடித்திருக்கும் சமூக நோய்களின்றும் நமது சிந்தனைத் தேக்கத்தினின்றும் விடுபடாமல், விடுதலை பற்றிப் பேசுவது பொருளற்றதாகும். எதையும் மூடிக் கட்டுவதால் நமது சிந்தனைத் தேக்கம் இல்லாமற் போகாது. அனைத்தையும் வெளிவெளியாகப் பேச வேண்டியுள்ளது. அதை

இலக்கியத்தால் மிகச் சிறப்பாகச் செய்ய இயலும். நாம் அதற்கு ஆயத்தமாக வேண்டும்.

- புலம்பெயர்ந்த சமுதாயத்தினர் தமக்கு முன்னாலுள்ள வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. முதலிற் தமது பிறந்த மண்ணிலிருந்து சுமந்து வந்த தேவையற்ற சுமைகளை அவர்கள் தமது தோள்களிலிருந்து கீழிறக்க வேண்டியுள்ளது. பண்பாட்டின் பேராலும் மதத்தின் பேராலும் பேணிவருகிற மூடத்தனங்களையும் கால விடயத்தையும் பொருள் விரயத்தையும் பற்றி மீளாய்வு செய்து சாதிய, ஆணாதிக்கச் சிந்தனைகளையும் நடைமுறைகளையும் தூக்கி எறிவதில் புலம்பெயர்ந்த சமூகம் முன்னோடியாக இருக்க இயலும்.

- புலம்பெயர்ந்த சமூகம் காலப் போக்கிற் தனது சூழலிற் தனது இருப்பைத் தீர்மானிக்கும். அடுத்தடுத்த தலைமுறைகள் தமிழிற் செயற்படுவது ஐயத்திற்குரியது. எனினும் ஈழ மண்ணுடனான தொடர்புகள் நீண்ட காலத்திற்கு இருந்து வரும். அது ஆரோக்கிய மான ஒரு உறவாகவும் ஒன்றுக்கொன்ற பயனுள்ள உறவாகவும் விருத்தி பெறுவதாயின் இரண்டு சமூகங்களினுள்ளும் ஆரோக்கிய மான சமூக விழுமியங்கள் விருத்தி பெறுவது அவசியம். உலகு பரந்த தமிழ் மக்களிடையில் நல்லுறவு உறுதிப்படுவது அவர்களைப் பிற சமூகங்களிலிருந்து தனிமைப் படுத்துவதாக இருக்கலாகாது.

- தமிழ் இலக்கியத்தில் நாமறிந்த முதலாவது மெய்யியற் சிந்தனையாக வரும் கணியன் பூங்குன்றனாரின் ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' எனும் வரியை வெறும் சுலோகமாக அன்றி அதன் முழுமையான பொருளில் இன்றைய உலகிற்குப் பொருந்திப் பார்க்கத் தமிழர் துணிய வேண்டும். அதற்குத் தமிழ் இலக்கியம் பாதை வகுத்துக் கொடுக்க வேண்டும். புலப்பெயர்வு ஈழத் தமிழுக்கு ஏற்பட்ட ஒரு கெடுதல். அதை நன்மையாக மாற்ற இயலும். அது நம் முன்னாலுள்ள முக்கியமான சவால்களுள் ஒன்றாகும்.

*(நன்றி: தேடல், கனடா, 2011)*

*****

# போராடல் பற்றி

**மாக்ஸ் பிரபாஹர்**

உயிரழியும் வலியுணர்ந்து பார்!
உறவுகள் பிரியும் பொழுதுககளின்
உணர்வுகளில் விழுந்து பார்

உடன்பிறப்பக்களைத் தொலைத்த
மனத்தின்
உடைந்த நிலையேகிப் பார்!

உன் மகன் அல்லது மகள்
கடத்தப்படும் கணங்களின் மேல்
கிடந்து பார்!

இணைவதைப் பிரிந்த
இழவு வீட்டின்
வெறுமையைத் தின்று பார்!

அம்மையப்பரை இழந்த
அனாதைக் குழந்தைகளின்
ஆழ்துயர் மொழிகளில் வாழ்ந்துபார்!

கொடும் வதைகள் தரும்
அவசரச் சட்டங்களின் கொடுமைகளில்
சிக்குண்டு சிதைந்து பார்!

*(தொடர்ச்சி மறுபக்கத்தில்)*

நன்மை தீமை இன்பதுன்பமென
நாள்தோறும் உடனிருந்த
தோழனைத் தொலைத்துருகும்
நிமிடங்களில் நின்று பார்!

ஏறிகணைகள் ஏவிவிடப்பட்ட
நிலத்திடை நின்று அவைதரும்
அசுர வலிகளை அனுபவித்துப் பார்!

கைகளைக் கால்களை, அன்றேல்
உடலதன் வேறு உறுப்புக்களை
ஷெல் வீச்சில் இழந்து
செத்துப் பிழைத்துப் பார்!

சமநிலைபெறாச் சமூகமொன்றில்
உரிமை இழந்தவனாய்இ சில
சமயங்களில் ஓரங்கட்டப்பட்டவனாய்
சஞ்சரித்துப் பார்!

அகதி வாழ்வில்
ஆகாரமின்றி முடங்கி
அவதியுற்றுப் பார்!

நொருங்கிய வாழ்வின் நோவுகள் தாளாது
நீயுங் கூட
இருப்புக்கான போராட்டத்தில் இறங்கிவிடுவாய்
பார்!

*****

# மறியலில்

*க்றிஸ்ற்றொFர் Fான் விக்*

அவன் ஒன்பதாம் மாடியிலிருந்து விழுந்தான்
அவன் தன்னைத் தூக்கிலிட்டுக் கொண்டான்
மேல் கழுவுகையில் அவன்
சவர்க்காரத் துண்டொன்றில் வழுக்கினான்
அவன் தன்னைத் தூக்கிலிட்டுக் கொண்டான்
மேல் கழுவுகையில் அவன்
சவர்க்காரத் துண்டொன்றில் வழுக்கினான்
அவன் ஒன்பதாம் மாடியிலிருந்து விழுந்தான்
மேல் கழுவுகையில் அவன்
தன்னைத் தூக்கிலிட்டுக் கொண்டான்
அவன் ஒன்பதாம் மாடியிலிருந்து வழுக்கினான்
அவன் ஒன்பதாம் மாடியிலிருந்து தொங்கினான்
மேல் கழுவுகையில் அவன்
ஒன்பதாம் மாடியில் வழுக்கினான்
வழுக்குகையில் அவன்
சவர்க்காரத் துண்டொன்றிலிருந்து விழுந்தான்
அவன் ஒன்பதாம் மாடியிலிருந்து தொங்கினான்
வழுக்குகையில் அவன்
ஒன்பதாம் மாடியிலிருந்து மேல் கழுவினான்
மேல் கழுவுகையில் அவன்
சவர்க்காரத் துண்டொன்றில் தொங்கினான்

*1957இல் பிறந்த க்றிஸ்ற்றொFர் Fான் விக்கின் (Christopher Van Wyk) குரல் தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சிக்கெதிரான குரல்களில் முக்கியமானது. இக் கவிதை நிறவெறி ஆட்சியின் கீழ் சித்திரவதைக்குட்பட்ட அரசியல் கைதிகள் சிறையில் சாவதற்கு அரசு அளிக்கும் விளக்கங்கள் மீதான அங்கதச் சுவையுடைய கண்டனமாகும்.*


*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***